உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

# சைவநீதி
## SAIVANEETHI



| மலர் 07 | சுபானு - தை | JANUARY - FEBRUARY 2004 | இதழ் 10 |
|---|---|---|---|



## சைவநீதி மாத இதழ்

### பெறுமதி விபரம்

தனிப்பிரதி ரூபா 25.00 ஆண்டொன்றிற்கு ரூபா 250.00 ஏனைய நாடுகளில்
ஆண்டொன்றிற்கு ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US$ 15

சைவநீதியின் வளர்ச்சியில் எங்கள் பங்களிப்பு என்ன என்பதை நாம் ஒவ்வொருவரும் சிந்திப்போமாக.

**சந்தா அனுப்பவேண்டிய முகவரி:**



***C. Navaneethakumar***
No30,Ramya Road, Colombo-04,
Sri Lanka.
T'Phone No: 2580458


# பொருளடக்கம்

பக்


01. வேதங்கள் ....03

02. வீட்டுக்கொல்லை ....06

03. திருவடி தீக்கை ....07

04. அன்பு என்னும் அரிய பண்பு ....14

05. சைவ அபரக்கிரியை ....18

06. ஐயமிட்டுண் ....20

07. சைவபூஷணம் ....21

08. பாரொடு விண்ணாய்ப் பரந்தவன் ....24



### சந்தா நேயர் கவனத்திற்கு

* உரிய காலத்தில் சந்தாவைப் புதிப்பித்துக்கொள்ளவும்.
* முகவரி மாற்றம் இருப்பின் எமக்கு அறியத்தரவும்.
* இதழ்கள் ஒழுங்காகக் கிடைக்காவிடின் எம்முடன் தொடர்புகொள்ளவும். கிடைக்காத இதழ்களை அனுப்பிவைப்போம்.

உ
சிவமயம்

சைவநீதி
SAIVANEETHY

"மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்"

# சைவநீதி



மலர் 7 சுபானு - தை சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் - 10

**தொடக்குனர்:**
கலாபூஷணம், ஞானசிரோமணி,
சைவப்புலவர்மணி, வித்துவான்,
**திரு. வ. செல்லையா**

**மதியுரைஞர்:**

**சிவஸ்ரீ. கு. நகுலேஸ்வரக்குருக்கள்**

**திரு. D. M. சுவாமிநாதன்**
அறங்காவலர்,
ஸ்ரீ பொன்னம்பலவாணேஸ்வரர் தேவஸ்தானம்

**திரு. அ. கந்தசாமி**
***Chairman U.P.S.***

**திரு. கு. மகாலிங்கம்**

**பதிப்பாசிரியர்:**
**திரு. வே. திருநீலகண்டன்**
லக்ஷ்மி அச்சகம்

**விநியோகம்:**
**திரு. க. சீனிவாசகம்**
ஓய்வுபெற்ற கோட்டக் கல்வி அதிகாரி

**நிர்வாக ஆசிரியர்:**
**திரு. செ. நவநீதகுமார்**
30, ரம்யா றோட், கொழும்பு-04.

தொடர்புகட்கு: *7.30 p.m. to 7.30 a.m.*

தொலைபேசி: 2580458

## தீட்சை

தீட்சை பெற்றுக்கொண்டவரே சைவசமயியாவர். ஒவ்வொரு சமயத்திலும் சமயத்தில் பிரவேசிப்பதற்குரிய கிரியை செய்வர். சைவ சமயத்தில் பிரவேசிப்பதற்குச் செய்யப்படுவதுதான் சிவதீட்சை அல்லது சமயதீட்சையாகும்.

ஏழு நாள் அல்லது ஒன்பது வயதில் தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும். தீட்சை பெற்றவர்தான் திருமுறை ஓதுவதற்கும் புராணபடனம் செய்வதற்கும் தகுதியுடையவர். ஆலயப்பணி, தொண்டுபடுதல் முதலியனவும் இவ்வாறே. தீட்சையில்லாதவர் செய்யும் பணியாவும் பொதுப் புண்ணியத்தின் பாலமையும். கடிதம் எழுதி முகவரி எழுதாது கடிதத்தைத் தபால் பெட்டியுள் இட்டால் அது உரிய இடத்திற்குச் செல்லாது போலத் தீட்சையில்லாது செய்கின்ற திருத்தொண்டுகளும் உரியவருக்குப் பலன் தராது.

ஆலயத்தைப் பரிபாலனம் செய்பவர்கள் குறைந்தது இரண்டு தீட்சையாவது பெற்றிருக்க வேண்டும் என்று ஆகமங்களின் வாயிலாக ஆறுமுகநாவலர் கூறியிருக்கிறார். சமய நிறுவனங்களில் இருப்பவர்களும் அவசியம் தீட்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிவராத்திரி, ஐப்பசி வெள்ளி முதலிய தினங்கள் சமய தீட்சைக்கு மிகவும் சிறந்த நாட்களாகும். இக்காலங்களில் பாடசாலைகள், சமய நிறுவனங்களிற் சமயதீட்சை ஏற்பாடுசெய்ய வேண்டும். தீட்சையின் மகத்துவத்தை மக்களுக்கு விளக்கி அவர்கள் தீட்சை பெற வழிவகை செய்தல் உயர்ந்த சிவப்பணியாகும்.

உ
சிவமயம்

# அகத்தியர் தேவாரத்திரட்டு
# திருநாவுக்கரசு சுவாமிகள்
# ஆறாந் திருமுறை
# திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

தில்லைச்சிற் றம்பலமுஞ் செம்பொன் பள்ளி
தேவன் குடிசிராப் பள்ளி தெங்கூர்
கொல்லிக் குளிரறைப் பள்ளி கோவல்
வீரட்டங் கோகரணங் கோடி காவும்
முல்லைப் புறவம் முருகன் பூண்டி
முழையூர் பழையாறை சத்தி முற்றங்
கல்லில் திகழ்சீ ரார்கா ளத்தியுங்
கயிலாய நாதனையே காணலாமே. 1

ஆரூர் மூலட்டானம் ஆனைக் காவும்
ஆக்கூரில் தான்றோன்றி மாடம் ஆவூர்
பேரூர் பிரமபுரம் பேராவூரும்
பெருந்துறை காம்பீலி பிடவூர் பேணுங்
கூரார் குறக்கை வீரட்டானமுங்
கோட்டூர் குடமமூக் குக்கோ ழம்பமுங்
காரார் கழுக்குன்றுங்கானப் பேருங்
கயிலாய நாதனையே காணலாமே. 2

இடைமரு தீங்கோ யிராமேச் சரம்
இன்னம்பர் ஏரிடவை ஏமப் பேறூர்
சடைமுடி சாலைக் குடிதக் களூர்
தலையாலங் காடு தலைச்சங் காடு
கொடுமுடி குற்றாலங் கொள்ளம் பூதூர்
கோத்திட்டை கோட்டாறு கோட்டுக் காடு
கடைமுடி கானூர் கடம்பந்துறை
கயிலாய நாதனையே காணலாமே. 3

எச்சில், இளமர், ஏமம், நல்லூர்,
இலம்பையங் கோட்டூர், இறையான் சேரி,
அச்சிறுபாக்கம், அளப்பூர், அம்பர்,
ஆவடு தண்டுறை, அழுந்தூர், ஆறை,
கச்சினம், கற்குடி, கச்சூர் ஆலக்
கோயில், கரவீரம், காட்டுப்பள்ளி,
கச்சிப் பல தளியும், ஏகம் பத்தும்,
கயிலாய நாதனையே காணலாமே. 4

கொடுங்கோளூர் அஞ்சைக் களம், செங்குன்றூர்
கொங்கணம், குன்றியூர், குரக்குக்காவு,
நெடுங்களம், நன்னிலம், நெல்லிக்காவு,
நின்றியூர், நீடூர், நியம, நல்லூர்,
இடும்பாவனம், எழுமூர், ஏழூர், தோழூர்,
எறும்பியூர், ஏராரும் ஏமகூடம்,
கடம்பை, இளங்கோயில், தன்னினுள்ளும்
கயிலாய நாதனையே காணலாமே. 5

மண்ணிப்படிக்கரை, வாழ்கொளிபுத்தூர்,
வக்கரை, மந்தாரம், வாரணாசி,
வெண்ணி, விளத்தொட்டி, வேள்விக்குடி,
விளமர், விராடபுரம், வேட்களத்தும்,
பெண்ணை அருட்டுறை, தண் பெண்ணாகடம்,
பிரம்பில், பெரும்புலியூர், பெரு வேளூரும்,
கண்ணை, களர்க்காறை, கழிப்பாலையும்,
கயிலாய நாதனையே காணலாமே. 6

வீழிமிழலை, வெண்காடு, வேங்கூர்
வேதிகுடி, விசயமங்கை, வியலூர்,
ஆழி அகத்தியான் பள்ளி, அண்ணா
மலை, ஆலங்காடும், அரதைப்பெரும்
பாழி, பழனம், பனந்தாள். பாதாளம்,
பராய்த்துறை, பைஞ்ஞீலி, பனங்காட்டூர், தண்
காழி, கடனாகைக் காரோணத்தும்,
கயிலாய நாதனையே காணலாமே. 7

உஞ்சேனை மாகாளம், ஊறல், ஒத்தூர்,
உருத்திரகோடி, மறைக்காட்டுள்ளும்,
மஞ்சு ஆர்பொதியின் மலை, தஞ்சை, வழுவூர்
வீரட்டம், மாதானம், கேதாரத்தும்,
வெஞ்ச மாக்கூடல், மீயச்சூர், வைகா,
வேதீச்சுரம், விவீசுரம், வெற்றியூரும்,
கஞ்சனூர், கஞ்சாறு, பஞ்சாக்கையும்,
கயிலாய நாதனையே காணலாமே. 8

திண்டீச்சரம், சேய்ஞலூர், செம் பொன்பள்ளி,
தேவூர், சிரபுரம், சிற்றமேஞ், சேறை,
கொண்டீச்சரம், கூந்தலூர், கூழையூர், கூடல்,
குருகாவூர், வெள்ளடை, குமரி, கொங்கு,
அண்டர் தொழும் அதிகை வீரட்டானம்,
ஐயாறு, அசோகந்தி, ஆமாத்தூரும்,
கண்டியூர் வீரட்டம், கருகாவூரும்,
கயிலாய நாதனையே காணலாமே. 9

நறையூரில் சித்தீச்சரம், நள்ளாறு,
நாரையூர், நாகேச்சரம், நல்லூர், நல்ல
துறையூர், சோற்றுத்துறை, சூலமங்கை,
தோணிபுரம், துருத்தி, சோமீச்சரம்,
உறையூர், கடல் ஒற்றியூர், ஊற்றத்தூர்
ஓமாம் புலியூர், ஓர் ஏடகத்தும்
கறையூர், கருப்பறியல், கன்றாப்பூரும்,
கயிலாய நாதனையே காணலாமே. 10

புலிவலம், புத்தூர், புகலூர், புன்னர்,
புறம் பயம், பூவணம், பொய்கை, நல்லூர்,
வலிவலம், மாற்பேறு, வாய்மூர், வைகல்,
வலஞ்சுழி, வாஞ்சியம், மருகல், வன்னி,
நிலமலி நெய்த்தானத் தோடு, எத்தானத்து
நிலவு பெரும்கோயில் பல கண்டால் தொண்டீர்!
கலிவலி மிக்கோனைக் கால்விரலால் செற்ற
கயிலாய நாதனையே காணலாமே. 11

திருச்சிற்றம்பலம்

# வேதங்கள்

திருமதி நித்தியவதி நித்தியானந்தன்

**வே**தங்கள் பற்றிய பொதுவான விடையங்களை இக் கட்டுரையில் நோக்குவோம்.

வேதம் "வித்" என்னும் சொல்லடியில் இருந்து தோன்றியது. வித் என்றால் அறிவு என்று பொருள் கொள்ளப்படும். ஆகவே வேதங்கள் என்ற சொல்லுக்கு அறிவு நூல்கள் என்று கூறலாம். அவ்வாறாயின் அவை எவை பற்றிய அறிவை எமக்குத் தந்து நிற்கின்றன என்ற வினா எழுகிறது.

அறிவு என்னும்போது அதனை இருவகையாக நோக்கலாம். நமது உலகியல் வாழ்வை வளம்படுத்த உலகிலுள்ள பொருட்களை எவ்விதமாகப் பயன்படுத்தலாம் என்று அறிய முற்படுவது ஒருவகை அறிவு. இந்த வாழ்க்கையும் உலகமும் எதற்கு என்று அறிய முற்படுவது இரண்டாவது வகை அறிவு. இந்த உலகம் எதிலிருந்து எங்ஙனம் எதற்காக உற்பத்தியானது என ஆராய்ந்து அவை பற்றிய அறிவைத் தருபவையாக வேதங்கள் விளங்குவதால் அவை அறிவு நூல்கள் என்ற பெயரைப் பெறுகின்றன.

வேதங்கள் இந்த அடிப்படை அறிவைத் தருவதால் அடிப்படை பற்றி நாம் அறிய வேண்டிய அனைத்தும் அங்கே கூறப்பட்டு விட்டது. இனி வேறு நூல்களில் இருந்து அறிவை வளர்த்துக் கொள்ள விடையமே இல்லை என்று எண்ணுவது பொருத்தமற்றது. இந்த அறிவுத் துறையில் பிற்காலத்தில் எழுந்த வளர்ச்சி அனைத்துக்கும் வேதங்களே வித்திட்டன எனத் துணிந்து கூறலாம். இந்திய தத்துவ ஞானத் துறையிலே பிற்காலத்தில் எழுந்த பிரமாண்டமான வளர்ச்சிக்கு வேதங்களிலே காணப்படும் சில வாக்கியங்களுக்கு விளக்கமும் அந்த விளக்கத்துக்கு விளக்கமுமாக எழுந்தவையே. இந்திய தத்துவ ஞானத் துறையிலும் சமயத் துறையிலும் இன்று சில மாறுபாடுகள், கருத்து வேறுபாடுகள் காணப்படினும் அவை அனைத்திற்கும் வேதங்களே அடிப்படை என்பதை நாம் மனதிற் கொள்ள வேண்டும்.

இந்திய தத்துவ ஞானத்திற்கும் சமய அறிவு அனைத்துக்கும் மூலம் என்பது மட்டுமல்ல மனித குலத்தின் முதற் சிந்தனைக் கூறுகளைத் தெரிவிக்கும் நூல் வேதங்களே என்பதும் குறிப்பிடத்தக்கது. வேத காலத்திலோ அல்லது அதற்கு முற்பட்ட காலத்திலோ ஆக்கப்பட்ட வேறு நூல்கள் எதுவும் இன்று கிடையாது. உலகம், ஆன்மா, இறைவன் ஆகியன பற்றி முதன் முதல் எத்தகைய சிந்தனைகளை மனிதன் கொண்டிருந்தான் என்பதை நாம் அறிய முற்பட்டால் வேத நூல்களையே நாம் நாட வேண்டி உள்ளது. இன்று உலகிலுள்ள கலாசாரங்கள் அனைத்திலும் இந்திய கலாசாரமே பழமையானதாகவும் இடையீடின்றித் தொடர்ச்சியானதாகவும் இருக்கின்றது. அவ்வாறே வேத காலத்திலும் அதற்கு முற்பட்ட காலத்திலும் ஆக்கப்பட்ட இலக்கியம் அழிந்து போக வேதங்கள் மட்டுமே அன்று போல் இன்றும் நிலைத்து நிற்கின்றன. இவ் அழிவற்ற தன்மைக்கு அவற்றின் கண்ணுள்ள சிவசக்தியே தனிச் சிறப்பாக உள்ளது.

வேதங்கள் உலக இலக்கியங்களுட் பழமை யானவை. காலத்தால் முற்பட்டவை என்று கூறும்போது அது ஆக்கப்பட்ட காலம் எது என்ற வினா எழுவது இயல்பு. கௌதம புத்தர் தமது சீரிய சிந்தனைப் பாதைகளை மக்களுக்கு எடுத்துக் கூறியபோது தமது காலத்தில் வழக்கிலிருந்த வேத கோட்பாடுகளை எதிர்த்தே தமது கருத்துக்களை, கோட்பாடுகளை வகுத்துக் கொண்டார் என்பதை அறியக் கூடியதாக உள்ளது. கௌதம புத்தரின் காலம் கி.மு 6ஆம் நூற்றாண்டாகும். ஆகையால் வேதங்கள் இற்றைக்கு 2500 ஆண்டுகளுக்கு முற்பட்டவை என்பதில் ஆட்சேபணை இல்லை. ஆயினும் கிறீஸ்துவுக்கு முன் எவ்வளவு காலம் தொடங்கி அவை உள்ளன என்பது நிட்சயமாக இல்லை. சிலர் வேதங்களின் காலம் கிறிஸ்துவுக்கு முன் 6000 ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கப்பட்டுவிட்டன என்று கூறுகின்றனர். இக் கருத்தை யாரும் ஆட்சேபித்தாலும் கிறிஸ்துவுக்கு முன் 1500 ஆண்டுகளுக்கு முன் அதாவது இற்றைக்கு 3500 ஆண்டுகளுக்கு முன்பே ஆக்கப்பட்டு விட்டன என்பதை யாரும் ஆட்சேபிக்கமாட்டார்கள் என்பது டாக்டர் ராதாகிருஷ்ணன் கருத்து.

வேதங்களை ஆக்கியோர் யார் என்று நோக்குவோமாயின் வேதங்கள் மனிதர் எவராலும் ஆக்கப்பட்டவை அல்ல என்று கருத்தில் வேதங்களுக்கு "அபௌர்ஷேயம் என்றொரு பெயர் உண்டு. புருஷன் என்பதற்கு மனிதன் என்பதே கருத்து. வேதங்கள் எவராலும் எழுதப்படாதவை. ஆதலால் எழுதாமறை என்ற பெயரும் அதற் குண்டு. வேதங்களை சுருதி என்றும் அழைப்பர். சுருதி என்றால் காதால் கேட்பது என்பது கருத்து. ஆதியில் வேதங்கள் எழுதி வைக்கப்படா மலிருந்த காலத்தில் குரு சீட முறையில் ஒருவர் சொல்ல மற்றவர் அதனைக் கேட்டு மனதில் வைத்து பின் தமக்குச் சீடராய் வருபவருக்குச் சொல்ல இவ்வாறு பல நூற்றாண்டு களாக கேள்வியினால் பாதுகாக்கப்பட்டது. இவ்வாறு பல விடையங்களையும் ஆராயுமிடத்து வேதங்கள் குறிப்பிட்ட ஒருவரால் குறிப்பிட்ட ஒரு காலத்தில் உருவாக்கப்படவில்லை என்பது உறுதியாகிறது.

தமிழ் மொழியில் அல்லாத வடமொழியில் எழுதப்பட்ட இந்த வேதங்கள் தமிழ் மக்களாகிய எம்முடைய தத்துவக் கொள்கைக்கும். சமயக் கொள்கைக்கும் மூல இலக்கியமாக முடியும்? தேவாரங்களிலே குறிப்பிடப்படும் வேதங்கள் வேறு வடமொழியில் உள்ள இவ் வேதங்கள் வேறு என்று வாதிடுவோரும் உள்ளனர். வேத வாக்கியங்களையும் அப்பர், சம்பந்தர், சுந்தரர் இயற்றிய தேவாரங்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்த அறிஞரான காசிவாசி செந்திநாதையர் அவர்கள் வேத சாரமே தேவாரம் என்பதைத் தக்க உதாரணம் காட்டி நிறுவியுள்ளார். அந் நூலிலே அவர் வேத சுலோகங்களையும் அவற்றின் தமிழ் விளக்கங்களையும் எழுதி அவை ஒவ்வொன்றிற் கும் பக்கத்திலே அதே கருத்துடைய தேவாரத்தை யும் எழுதி வெளியிட்டுள்ளார். மூவர் தேவாரங் களையும் வேத சாரமாகக் கொள்வதுபோல் மாணிக்கவாசகரின் திருவாசகத்தை உபநிடதங் களின் சாரமாகக் கொள்ளும் மரபும் உண்டு.

இவற்றை நோக்கும்போது ஆரியர் இந்திய நாட்டில் புக முன்பே இந்திய நாட்டிலே நிலவிய

**வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்** 471

*தான் செய்யத் துணிந்த செயலின் வலிமையையும், அதைச் செய்யப் போகும் தன் வலிமையையும், அதை எதிர்க்க வரும் பகைவன் வலிமையையும், இருவர்க்கும் துணையாக வருபவரின் வலிமையையும் ஆராய்ந்து பார்த்து, தன் வலிமை மிகுதியாக இருந்தால் அச்செயலைச் செய்ய வேண்டும்.*

கருத்துக்களே வேதங்களில் இடம்பெற்றுப் பின் தமிழ் நூல்களிலும் இடம்பெற்றன எனக் கருதுவதே பொருத்தமுடையது. ஆயினும் இவை மேலதிக ஆய்வினுக்கு உட்பட வேண்டியவை.

வேதங்களிலே கூறப்பட்ட சமய தத்துவக் கருத்துக்களை நோக்கு முன் அக் கால சமூக நிலை பற்றிய சில விபரங்களை அறிந்து கொள்வது பொருத்தமானது.

வேத காலம் இந்து தர்ம வரலாற்றில் பொற்காலம். அக் காலத்தில் வாழ்க்கையின் மதிப்பீடு மிக உயர்ந்திருந்தது. மனித தர்மம் நன்கு கடைப்பிடிக்கப்பட்டது. சமுதாயக் கட்டுக் கோப்பும் இருந்தது. தனி மனிதனின் சுதந்திரமும் பாதுகாக்கப்பட்டிருந்தது. 21ஆம் நூற்றாண்டில் நாம் சாதித்துவிட்டதாக எண்ணிப் பெருமைப்பட்டுக் கொள்ளும் பகுத்தறிவு வாதம், சமதர்மம், பெண்ணுரிமை, விதவாமறுமணம், கலப்புத் திருமணம், 18 வயதுக்கு மேல் பெண்களுக்குத் திருமணம், பெண் கல்வி இவை எல்லாமே வேத காலத்தில் பழக்கத்தில் இருந்தவை தான் என்று கூறினால் சிலருக்கு ஆச்சரியமாக இருக்கலாம். ஆனால் அது தான் வரலாற்று உண்மை. இன்னும் சொல்லப் போனால் இன்றைக்கு சமுதாயத்தை அரித்துக்கொண்டிருக்கும் ஜாதிச் சண்டை, சீதணக் கொடுமை, பெண்ணடிமை இவை எதுவும் அன்றைய வேத காலச் சமுதாயத்தில் இல்லை.

வேதகாலம் மனிதர்களை மனிதர்களாக மதித்துப் பிரம்மா, விஷ்ணு, சிவன், சக்தி என்ற பேதமின்றி எங்கும் நிறைந்த பரம்பொருளை வழிபடுவதையே வேதம் வலியுறுத்தியது. ஏட்டுக் கல்விக்கு மட்டுமன்றி தொழிற்கல்விக்கும் முக்கியம் தரப்பட்டது.

பெண்களுக்குப் பூரண சுதந்திரம் இருந்தது. பால்ய விவாகம் வேதகாலத்தில் அனுமதிக்கப்பட வில்லை. விதவைகள் மறுமணம் அனுமதிக்கப் பட்டிருந்தது. எட்டுவகைத் திருமணங்களை வகுத்து வைத்திருந்த அந்தக் காலத்தில் சீதனக் கொடுமை இருக்கவில்லை. பெண்களை விற்பனைப் பொருள்களாக, வியாபாரப் பொருளாக விளம்பரப் பொருளாக எண்ணும் அவல நிலை அன்று இல்லை.

பெண்கள் ஆண்களுக்குச் சமமாகப் படித்தார்கள். குருகுலம் நடத்தினார்கள். ஒழுக்க மில்லாத கணவனைத் துறக்கும் உரிமை அவளுக்கிருந்தது. திருமணம் ஆன பின் பெண் ணுக்குத் தேவையான பாத்திரம், பண்டம், துணிமணிகளை ஆண்மகனே வாங்கிக் கொடுத்தானே அன்றி சீர் வரிசைகளைப் பெற்று பெண்ணைப் பெற்றவர்கள் பிட்சாண்டியாக்க வில்லை. இதை அக்கால ஆண்மக்கள் பெருமை யாகக் கருதினர். அறிவின் வளர்ச்சி, முதிர்ச்சி இவையே மனித தர்மத்தின் முக்கிய கொள்கை யாக இருந்தது. இதுவே வேதகாலச் சமூகம் இவற்றிற்கு சட்டப்புத்தகங்களாக இருந்தவையே வேதங்கள்.

மீண்டும் ஒரு வேதகாலம் தோன்றுமானால் அவையே இந்து சமயத்தின் மறுமலர்ச்சி

(மிகுதி அடுத்த இதழில்)

**Let (a king) weigh well the strength of the deed (he purposes to do), (let him consider) his own strength, the strength of his enemy and the strength of the allies (of both) and then let him act. 471**

# வீட்டுக்கொல்லை

ஆறுமுக நாவலர்

அழுகின பதார்த்தங்களும் மல மூத்திரங்களும் துர்க்கந்தத்தை வீசும். துர்க்கந்தம் அளாவிய காற்றைப் பூரித்தாலும், அந்தக் காற்று உடம்பிலே பட்டாலும், மல மூத்திரங்களை மிதித்தாலும், மலமூத்திர பூமியிலே உண்டாகிய பதார்த்தங்களைப் புசித்தாலும், மலமூத்திரவழுக்குச் சேர்ந்த சலத்தை உபயோகித்தாலும், பலவித நோய்கள் உண்டாகி, மனிதருக்கு சடிதியிலே மரணத்தை விளைவிக்கும். ஆதலினாலே, மனிதர் சஞ்சரிக்கும் இடமெல்லாம் சுசியுடையதாய் இருக்கும்படி பாதுகாத்தல் பெருந்தருமம்.

வீட்டுக்குச் சமீபத்திலே மலமூத்திரங்களை விடுதலும், எச்சிலிலைகளையும் குப்பைகளையும் போடலும், எச்சிலுமிழ்தலும், கை கால் கழுவலும் ஆகாவாம்.

வீட்டைச் சேர்ந்த கொல்லை யெங்கும் மலமூத்திரங்களினாலும், எச்சிலினாலும், குப்பையினாலும் அசுசி அடையாவண்ணம் அந்தக் கொல்லையிலே, வீட்டுக்குத் தூரத்திலே, மலகூடமும், எச்சிலிலைக்குழியும் குப்பைக் குழியும் அமைப்பித்தல் வேண்டும். இப்படிச் செய்தால் கொல்லையும் வீடும் அசுசியடையாமல், சுசியுடையவைகளாயே இருக்கும்.

வீட்டுக்குச் சமீபத்தில் சிறுகுழிகள் உண்டானால் அவைகளைத் தூர்த்துப்போடல் வேண்டும். அப்படிச் செய்யாதொழிந்தால், அவைகளிற் சென்ற தண்ணீர் அங்கே தங்கிச் சேறாகித் துர்க்கந்தத்தை வீசும். அந்தச் சேற்றிலே புழு முதலிய செந்துக்கள் உண்டாகும். அந்தத் துர்க்கந்தத்தினாலே சுரமுதலிய வியாதிகள் வரும்.

கொல்லையில் உதிர்ந்த இலைகளையும் சருகுகளையும் நாடோறும் பெருக்கி, குப்பைக் குழியிலே கொட்டல் வேண்டும். கொல்லையிலே முளைத்த பயன்படாத செடிகளெல்லாவற்றையும் காலந்தோறும் களைந்து, குப்பையுடனே போடல் வேண்டும். இப்படிச் சேர்க்கின்ற திரளான குப்பை பயிர்களுக்கு நல்ல எருவாகும்.

யாவரும் தங்கள் தங்கள் வீட்டுக்கொல்லைகளிலே உபயோகமாகும் பயிர்களையும், சிறந்த மரங்களையும், அழகிய புஷ்பச் செடிகளையும் வைத்து, அந்தக் கொல்லைகளை மிகச் சிறப்பித்தல் வேண்டும். இத்தன்மையுடைய கொல்லைகளிலே உண்டாகும் நல்ல காற்று ஆரோக்கியத்தை விளைவிக்கும். பனைமரங்களையும் தென்னை மரங்களையும் வீட்டுக்குச் சமீபத்தில் வைக்கலாகாது.

கிணற்றினுள்ளே இலைகள் உதிர்ந்து அழுகினாலும், சூரியகிரணம் படாதொழிந்தாலும், ஜலங் கெட்டுப்போம், ஆதலினாலே, கிணற்றுக்குச் சமீபத்திலே பெருமரங்களை வைக்கலாகாது. பழஞ்சலமும், தூர் அதிகமாக உள்ள சலமும், வியாதியை உண்டாக்கும். ஆதலினாலே கிணற்றுச் சலத்தைக் காலந்தோறும் முழுதும் இறைத்துத் தூர்வாரிச் சுத்தி செய்வித்தல் வேண்டும். இரண்டு மூன்று நாளுக்கொருதரம் கிணற்றுச்சலம் முழுவதையும் இறைப்பித்து வந்தால் கொல்லையிலுள்ள மரங்களுக்கும் செடிகளுக்கும் பயிர்களுக்கும் உபயோகப்படும். அதுமட்டோ, ஜலம் நன்றாயிருக்கும். புதிது புதிதாக ஊறுஞ் சலம் நல்ல சுவையுடையதாயும், வியாதியை விளைவிக்காததாயும் இருக்கும்.

சுசியுடைமை சரீரத்துக்கு ஆரோக்கியத்தையும் மனசுக்குச் சௌக்கியத்தையும் கொடுக்கும். இவ்வுண்மை அவிவேகமுள்ள ஏழைச் சனங்களுக்குத் தெரியாது. ஆதலினாலே பக்கத்திலுள்ள விவேகிகள் இதை அவர்களுக்கு நன்றாகத் தெரியும்படி சொல்லல் வேண்டும்.

**ஒல்வது அறிவது அறிந்துஅதன் கண்தங்கிச்**
**செல்வார்க்குச் செல்லாதது இல்** 472

*தம்மால் செய்வதற்கு இயலும் செயலையும், அதன் தொடர்பாக அறிய வேண்டிய எல்லாவற்றையும் அறிந்து, அம்முயற்சியில் உறுதியாக மனத்தை ஊன்றிப் பகைமேல் செல்லும் அரசர்க்கு முடியாதது ஒன்றும் இல்லை.*

# திருவடி தீக்கை

C.K சுப்பிரமணிய முதலியார் B.A;

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவார்**

**மற்றீண்டு வாரா நெறி**

## திருவதிகை வீரட்டானம்

திருப்பாதிரிப் புலியூரில் சிலநாள் தங்கித் திருவதிகை விரட்டானே சுவரர் திருவடிகளை மிக நினைந்து புறப்பட்டுத் திருமாணி குழி திருத்திணைநகர் இவற்றைப் பணிந்து பாடித் திருக்கெடில நதியைக் கடந்து திருவதிகைப் பதியினை அணைந்தனர். கொடிய சமண் குண்டர்கள் செய்த தீய கொடுமைகளை யெல்லாம் கடந்து தமிழ் மன்னர் எழுந்தருளுகின்றனர் எனக் கேட்ட திருவதிகைப் பதிவாணர்களெல்லாம் பெரிய மங்கல மொழிகளைச் சாற்றி நகரை அலங்கரித்து அவரை எதிர் கொண்டார்கள். அவருடைய பொன்மேனியில் தூய திருநீறு துதைந்து விளங்கியது. கழுத்திலும் சிரத்திலும் உருத்திராக்க வடங்கள் மிளிர்ந்தன. அவரது மனமானது நாயகரது திருவடிகளை மெல்ல வருடி நின்றது. நைந்துருகிப் பாய்வது போலத் தாரையாகக் கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்தது. திருவாய் பதிகச் செஞ்சொல் பொழிந்தது. இத்தன்மையராக நாயனார் திருவீதியினுள் புகுந்தனர். அவரது திருக்கோலத்தைப் படம் வரைந்து காட்டுவது போல ஆசிரியர் சேக்கிழார் காட்டுகிறார். திருவதிகையில் அருள் பெற்ற பின்பு திருவருள் வெளிக்கண்டு உலகமுய்யக் காண்பது இதுவே முதலாகையால் இவ்வாறு தாமும் கண்டு தரிசித்து ஆசிரியர் உலகுக்கும் காட்டுகிறார் போலும்!

**தூய வெண்ணீறு துதைந்தபொன் மேனியுந் தாழ்வடமும்**
**நாயகன் சேவடி தைவரு சிந்தையு நைந்துருகிப்**
**பாய்வது போலன்பு நீர்பொழி கண்ணும்பதிகச்**
**செஞ்சொன்**
**மேய செவ்வாயுமுடையார் புகுந்தனர் வீதியுள்ளே**

அரசு- புரா-140

அவரைக் கண்ட மாந்தர்கள் கைதலை மேற்கூப்பி வணங்கி, இந்தக் கருணைத் திருவுருவைக் கண்டால் சமணர்கள் தீங்கு செய்யச் சினம் விளைந்தவாறு தான் என்னே? என்று சொல்லி மீண்டும் தொண்டரை ஆட்கொண்டருளிய பெருமானைத் தொழுது வணங்கினர். நாயனார் திருக்கோயிலுக்குட் புகுந்து அன்பு மிக்க காதலினாற் பணிந்து எம்பெருமானை ஏழையேன்நான் பண்டு இகழ்ந்தவாறே என்னும் கருத்துடைய திருத்தாண்டகத்தைப் பாடிப்போற்றி வாழ்ந்தார். இவ்வாறு இன்னும் பற்பல பாமாலைகளைப் பாடிப் பணிசெய்திருந்தனர்.

## குணபரவீச்சரம்

புல்லறிவிற் சணர்களுக்காக அவர்களது வசப்பட்டுப் பொல்லாங்கு புரிந்த பல்லவ மன்னவனும் தன்னுடைய பழவினைப் பாசம் பறிந்ததனாலே அத்தொடக்கு நீங்கி திருவதிகை பதியினை அடைந்து திருநாவுக்கரசரைப் பணிந்து

**There is nothing which may not be accomplished by those who, before they attack (an enemy), make themselves acquainted with their own ability and with whatever else in (needful) to be known, and apply themselves wholly to their object. 472**

அமணர்களை விட்டு நீங்கிச் சிவபெருமானுக்கு ஆளாயினான். உண்மையுணர்ந்த அந்தக் காடவமன்னவனும் பாடலிபுரத்திரத்திற் பள்ளி களையும் பாழிகளையும் இடித்துக் கொண்டு வந்து திருவதிகைப் பதியிலே சிவனுக்குக் குணபரவீச்சரம் என்னும் ஒரு கோயிலை எடுப்பித்தான். அக்கோயில் இன்றும் பார்க்க உள்ளது.

### தலையாத்திரை

இந்நாளிலே வாகீசத் திருமுனிவர் பல பதிகளிலும் சென்று இறைவருக்குப் பணிசெய்ய வேண்டும் மென்று புறப்பட்டுத் திருவெண்ணைய் நல்லூர், திருவாமாத்தூர், திருக்கோவலூர் முதலாகிய பதிகளைவணங்கிக் கொண்டு திருப்பெண்ணா கடத்தை அணைந்தனர். அங்குத் திருதூங்கானை மாடத்தில் சுடர்க் கொழுந்தீசரைப் பணிந்து துதித்தனர். இறைவனே! புன்னெறியாகிய சமண்சமயத் தொடக்குண்டு பன்னாள் இவ்வுடல் கிடந்தது. இதனைத் தரித்து உயிர்வாழ நான் தரியேன். இவ்வுடலோடு உயிர் வாழ்வதற்குத் தகுதி பெறும்படி உன்னுடைய சூலம் இடபம் ஆகிய முத்திரையைப் பொறித்தருள வேண்டும் என்று வேண்டிப் பதிகம் பாடினார்.

**தூங்கானைமாடம்:- சூலம்-இடபம் பொறிக்கப் பெறுதல்.**

**'பொன்னார் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம்
போற்றி செய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண் டேவிருங்கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்மேற்பொறி
மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுட் டூங்கானை மாடச்சுடர்க்
கொழுந்தே'**

**'கடவுந் திகிரிகடவா தொழியக் கயிலையுற்றான்
படவுந் திருவிரலொன்று வைத்தாய் பனிமால்
வரைபோல்
இடபம் பொறித்தென்னை யேன்றுகொள் ளாயிருஞ்
சோலை திங்கள்
தடவுங் கடந்தையுட் டூங்கானை மாடத்தெந்
தத்துவனே'**

அரசு- தேவா-திருவிருத்தம் திருத்தூங்கானை மாடம்.

இறைவரருளினாலே ஒருசிவ பூதம் பக்கத்திலுள்ள ஒருவரும் அறியாமல் வந்து அவரது தோல்களில் சூலத்தையும் இடபத்தையும் முத்திரையிட்டுப் பொறித்தது. அந்த முத்திரையைக் கண்டு மனம் களித்துத் தளிர்த்தது. தம் பெருமானாரது திருவருளை நினைந்து கண்கள் நீர் பொழியத் தொழுது விழுந்து உய்ந்தொழிந்தேன் என எழுந்தார்.

இவ்வாறு தோல்களில் இடபம் சூலம் ஆகிய முத்திரை பொறித்தல் என்னும் வழக்கம் முன்னாளில் சைவர்களுக்கும் இருந்தது. பின்னால் வழக்கொழிந்து விட்டது. இவ்வழக்கத்தை வைணவர்களும் மாத்துவர்களும் கைப்பற்றி வழங்கி வருகிறார்கள். இது தூல தேகம் சுத்தமாதற் பொருட்டுச் செய்யப்படுவது. இது சிவதீக்கையிலும் நித்திய ஆன்மார்த்த பூசைகளிலும் ஒரு அங்கமாக உள்ளது. சமணர்களுடன் பலநாட் பயின்று கிடந்த உடலின் தூய்மையின்மையை நீக்கித் தூய்மை செய்தற் பொருட்டே நாயனார் இதனை வேண்டிப் பெற்றார் என்பது காண்க. அன்றியும் ஒரு சேவகன் தாங்கி நிற்கும் வில்லையின் முத்திரையானது அவன் இன்ன தலைவனுடைய ஆள் என்பதையும் அறிவித்து நிற்பது போல இந்த முத்திரையும் இந்த உடம்பு சிவனுக்காட்பட்டது. என்பதையும் காட்டி நிற்கும்.

**உடைத்தம் வலி அறியார் ஊக்கத்தின் ஊக்கி
இடைக்கண் முரிந்தார் பலர். 473**

*தம்முடைய உண்மையான வலிமையைச் சரியாக அளந்து அறியாமல், ஊக்க மிகுதியால் தம்மை விட வலியவரோடு போர் செய்ய முயன்று, அவர் தாக்குதலைப் பொறுக்க முடியாமல் இடையே கெட்டுப் போன அரசர் உலகத்தில் பலராவார்.*

அதன் பின்பு நாயனார் அங்கு சிலநாட்கள் பணிசெய்து அகன்று போய் திருநெல் வாயிலரத் துறை,திருமுதுகுன்றம் என்ற பதிகளிற் சென்று வணங்கிக் கொண்டு நிவா நதிக்கரை வழியாகச் சென்று திருத்தில்லை பதியினை அடைவா ராயினார்.

### தில்லை தரிசனம்

**'ஆனாத சீர்த்தில்லை யம்பலத்தே ஆடுகின்ற**
**வானாறு புடைபரக்கு மலர்ச்சடையா ரடிவணங்கி**
**ஊனாலு முயிராலு முள்ளபயன் கொளநினைந்து**
**தேனாரு மலர்ச்சோலைத் திருபுலியூர்**
**மருங்கணைந்தார்'**

அரசு-புரா-156

தில்லைக்கு 10 நாழிகையளவில் உள்ள அதன்மேற்கு எல்லையினை வணங்கி வயல்களும் சோலைகளும் நந்தவனங்களும் நிறைந்த வழியாக வருகின்றார். சோலைகளிலும் நந்தவனங்களிலும் மரங்களின் கிளைகளில் குயில்கள், புட்கள் பூவைகள் இருந்து இவரது திருவடியைக்கண்டு பயிற்சி வயத்தால் அரஅரமுழக்கம் செய்தன. அறிவிற் பெரியவர் அணைகிறார்,பிறவிப்பாசம் விடும் வேட்கையுடையீர் வம்மின்கள் என்று கூவின.ஸ்ரீமாணிக்கவாசகனாரது திருவருட் பார்வையும் பாவனையும் (திருவாசகம்- குயிற்பத்து, திருத்தசாங்கம். திருக்கோத்தும்பி) உபதேசமும் பெற்ற பரம்பரையில் வந்தவையன்றோ அந்தக் குயில்களும் கிளிகளும்? அடியார் கூட்டங்களைக் கண்டு அரஅகர முழக்கம் கேட்டுப் பழகிய பயிற்சியுமுடையவையன்றோ? அவற்றின் சிவமொழியைக் கேட்டு உருகிய மனத்துடன் கண்கள் நீர் பொழிய வந்து நாயனார் எழுநிலைகளையுடைய மேலைக்கோபுரத்தைக் கடந்து திருவீதியைப் பணிந்து உள்புகுந்தனர், அடியார்கள் எதிர்கொண்டனர் திருமறைகளின் ஓசை பெருகிய திருமாளிகையை வலம் வந்து இறைவன் திருநடனஞ் செய்யும் திருவம்பலத்தின் முன்பு சேர்ந்தனர். தேவர்கள் முனிவர்கள் தெரிய வரிய அமுதத் திருநடனத்தை ஆராவகை தொழுதார்கின்றாராயினார். கைகள் தலைமீது அஞ்சலித்தன. கண்கள் ஒழியாத நீர்த்தாரை பெய்தன. கரணங்களெல்லாம் உருகின. பேறு பெறும் திருமேனியும் தரையில் வீழ்வதும் அதன் முன்பு எழுதருவதுமாயிற்று. என்று வந்தாய் என்னும் குறிப்புடன் அணைத்து இறைவர் அருள் செய்தனர். அது கண்டு திளைத்து **"என்று வந்தாயென்னு மெம்பெரு மான்றன் திருக் குறிப்பே"** என்று பதிகம் பாடினர். **"பத்தனாய்ப் பாடமாட்டேன்".** உன் ஆடல் காண்பான் அடியனேன் வந்தவாறே **"என்னை நீ இகழ வேண்டா"** என்று பதிகமும் பாடினார்.

திருமுன்றிலினும் திருவீதியினுள்ளும் உழவார்க் கைத்திருத்தொண்டு செய்து அங்கிருந்தனர். திருவேட்களம், திருக்கழிப்பாலை இவற்றைச் சென்று வணங்கி, **"நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டருளும் அம்பலத்து நிருத்தனாரை தினைத்தனையாம் பொழுதும் மறந்துய்வனோ"** என்று நினைத்துக்கொண்டு மீளவும் திருத்தில்லை சார்ந்து அரியானை என்னும் பெரிய திருத்தாண்டகமும் பிற பதிகங்களும் பாடிப் பணிசெய்திருந்தனர்.

திருப்பதிகங்களுக்குப் பெயர் கொடுப்பதும், பெயர்களை விளக்குவதும் ஆசிரியர் சேக்கிழார் பெருமானுடைய மரபு. காப்புத் திருத்தாண்டகம் நின்ற திருத்தாண்டகம் மறுமாற்றத் திருத் தாண்டகம் முதலியவை காண்க. இங்கு அரியானை என்று தொடங்கும் திருத்தாண்ட கத்தைப் பெரிய திருத்தாண்டகம் என்று பேரிட்டு

**There are many who, ignorant of their (want of) power (to meet it), have haughtily set out to war, and broken down in the midst of it. 473**

அதன் தன்மையும் **"அவர் தஞ்சிந்தை பிரியாத பெரிய திருத்தாண்டகச் செந்தமிழ்"** (அரசு- புரா- 1757)என்று விளக்குகிறார். **"நின்ற திருத்தாண்டக மும் நீடு தனித் தாண்டகமும் மன்றுறைவார் வாழ்பதிகள் வழுத்து திருத்தாண்டகமும், கொன்றை மலர்ச்சடையார்பாற் குறைந்தடைந்த நேரிசையும்"**

(அரசு-புரசு-414)

## ஆளுடைய பிள்ளையார் சந்திப்பு

அந்நாளில் சீகாழியில் அவதரித்து மூன்றாண்டில் அம்மையாரது திருமுலைப்பால் உண்டு சிவஞான சம்பந்தராய் விளங்கிய ஆளுடைய பிள்ளையாரது திருவார்த்தையை அடியார்கள் உரைப்பக் கேட்டனர். அங்கு சென்று அவரது மலரடிகளை வணங்குவதற்கு மனங் கொண்டார். அப்பொழுதே அம்பலவாணரது அருள் விடை பெற்றுக் கொண்டு பொய்ப்பிறவி பிணி யோட்டுந் திருவீதியைப் புரண்டு அங்க பிரதட்சிணம் செய்து புறபட்டு திருநாரையூர் பணிந்து சீகாழியைச் சேர்ந்தனர். அவரும் இவரைக் காணவேண்டு மென்று மிகவும் காதல் கொண்டவராய் அடியார்கள் புடைசூழ எதிரே வந்தார். இரண்டு திறத்து அடியார்களும் கலந்த கூட்டத்தினடுவே வாகீசர் ஆளுடைய பிள்ளையாரது மலர்க்கழல்களில் வீழ்ந்து வணங்கினார். **"அப்பரே"** என்று அவர் வாகீசரை எடுத்து வணங்கினார். திருக்கூட்டத்தில் ஒருவர் ஒருவரிற் கலந்த உவகையோடும் சிவநாமம் முழங்க இன்பம் மிக்கது. பிள்ளையார் வாகீசமா முனிவரைத் திருக்கோயிலுக்கு அழைத்து சென்றார். இருபெரு மக்களும் கூடிக் கோயிலுக்குச் சென்றார்கள். இதை ஆசிரியர் சேக்கிழார் மிக அருமையாகவும் அழகாகவும் அருளிச் செய்கின்றார்.

**அருட்பெருகு தனிக்கடலு முலகுக்கெல்லா, மன்புசெறி**
**கடலுமா மெனவு மோங்கும்**
**பொருட்சமய முதற்சைவ நெறிதான்**
**பெற்ற, புண்**
**ணியக் கண்ணிரன் டெனவும் புவனமுய்ய**
**இருட்கடுவுண் டவரருளு முலகமெல்லா மீன்றாடன்**
**திருவருளு மெனவுங் கூடித்**
**தெருட்கலைஞா னக்கன்று மரசுங்கூடிச், செஞ்**
**சடைவா னவர் கோயில் சேர்ந்தா ரன்றே**

அரசு-புரா-185

## திருக்கோயிலை வலம்வந்து தோணியப்பர் திருமுன்பு கொண்டுபுகல்

**"அப்பரே! உங்கள் தம்பிரானாரை நீர் பாடீர் என்று ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்ய"** வாகீச முனிவரும் **"பார்கொண்டு மூடி"** என்று தொடங்கும் திருப்பதிகத்தைக் கட்டளை யிட்டனர். இருவருமாகப் பிள்ளையாரது திரு மடத்துக் கெழுந்தருளினர். அங்கு அமுதுண்டு சில நாள் தங்கியிருந்தார். அதன் பின் அவரிடம் விடைபெற்றுப் பிற பதிகளிலும் சென்று வணங்குவாராய்த் திருக்கோலாக்காவை அவரோ டும் கூடச்சென்று வழிபட்டு விடைபெற்றுப் புறப்பட்ட னர். காவிரியினிருகரையிலுமாகச் சென்று திருக்கருப்பறியலூர் நீடுர் முதலிய பதிகளை வணங்கிக் கொண்டு திருவாவடுதுறையைச் சேர்ந்து வணங்கிப் பல பதிகங்கள் பாடித் துதித்து அங்கு சில நாள்கள் தங்கினார். பின்பு திருநாகேச்சுரத்தை வணங்கிக் கொண்டு திருச்சத்திமுற்றத்திற் சென்று சேர்ந்தனர்.

**அமைந்துஆங்கு ஒழுகான் அளவுஅறியான் தன்னை**
**வியந்தான் விரைந்து கெடும்** 474

*வேற்றரசரோடு இணக்கமாக நடந்து கொள்ளாமலும், தன் வலிமையின் அளவை அறியாமலும், தன்னை உயர்வாக மதித்து அவரோடு பகைகொண்ட அரசன் விரைந்து கெடுவான்.*

**திருச்சத்திமுற்றம், திருநல்லூர், திருவடித் தீக்கைப் பேறு**

அங்கு சிவக்கொழுந்தீசரை வணங்கிப் **"பெருமானே! தடுக்கலாகாத ஆணையையுடைய கூற்றுவன் வந்து என்னைக் கொள்வதன் முன் உனது பூவார்ந்த திருவடிகளைச் சுவடுபட என்மேல் பொறித்துவை:அப்படியல்லாது என்னைப் புறக்கணித்துப் போகவிட்டாயானால் அடியானைக் கைசோரவிட்டானென்னும் பெரிய முழுப்பழி வந்து உன் மேல் மூளும்".** என்று விண்ணப்பித்துப் பதிகம் பாடியருளினார்.

**'கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன் முன்**
**பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை, போகவிடின்**
**மூவாமுழுப்பழி மூளுங்கண் டாய்முழங்**
**குந்தழற்கைத்**
**தேவா திருச்சத்தி முற்றத் துறையுஞ்**
**சிவக்கொழுந்தே**

அரசு-தேவ-திருச்சத்திமுற்றம்-1

**'வெம்மை நமன்றமர் மிக்கு விரவியிழுப்பதன்முன்**
**இம்மையுன் றாளென்ற னெஞ்சத் தெழுதிவை,**
**யீங்கிகழில்**
**அம்மை யடியேற் கருளுதி யென்பதிங்**
**காரறிவார்**
**செம்மை திருச்சத்தி முற்றத் துறையுஞ்**
**சிவக்கொழுந்தே'**

**கூடி - 6**

இதுபோலவே கூறி ஸ்ரீ மணிவாசகனார் விண்ணப்பிக்கின்ற திருவாசகங்கள் ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

**அருளாதொழிந்தா லடியேனையஞ்சே லென்பா**
**ராரிங்கு**
**பொருளா லென்னைப் புகுந்தாண்ட பொன்னே**
**பொன்னம்பலக் கூத்தா**
**மருளார் மனத்தோ டுனைப்பிரிந்து வருந்து**
**வேனைவாவென்றுன்**
**றெருளார் கூட்டங்காட்டாயேற் செத்தேபோனாற்**
**சிரியாரோ?**

கோயில் மூத்த திருப்பதிகம்-8

**'தாரகை போலுந் தலைத்தலை மாலைத்**
**தழலராப்பூண்**
**வீரலென் றன்னை விடுதிகண் டாய்விடி**
**லென்னைமிக்கார்**
**ஆரடியா னென்னின் உத்தரகோச மங்கைக்கரசின்**
**சீரடி யாரடி யானென்று நின்னைச் சிரிப்பிப்பனே'**

நீத்தல்விண்ணப்பம் 48

நாயனாரது விண்ணப்பத்திற்கு இறைவர் **"திருநல்லூருக்கு வா"** என்று ஆணையிட்டருள அவ்வாறே திருநல்லூர் சென்று வணங்கினார். வணங்கி மகிழ்ந்தெழும் போதில் **"உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்",** என்று அவருடைய சிரத்திலே சிவபெருமானார் திருவடி மலர்களைச் சூட்டியருளினார்.

**நன்மைபெரு கருணெறியே வந்தணைந்து**
**நல்லூரின்**
**மன்னுதிருத் தொண்டனார் வணங்கிமகிழ்ந் தெழும்**
**பொழுதில்**
**உன்னுடைய நினைப்பதனை முடிக்கின்றோம்,**
**'என்றவர்தஞ்**
**சென்னிமிசைப் பாதமலர் சூட்டினான் சிவபெருமான்'**

அரசு-புரா-195

அதுபெற்ற நாயனார் **"நனைந்தனைய திருவடி யென்றலை மேல் வைத்தார் நல்லூர் ரெம்பெருமானார் நல்லவாறே"** என்னும் திருத்தாண்டகம் பாடிப் போற்றிசைத்தார். இறைவர் திருவருளை நினைத்துருகினார். விழந்தெழுந்து

**He will quickly perish who, ignorant of the measure (of his resources) flathers himself and does not live in peace with his neighbours. 474**

நிறைந்து மலர்ந்தார். வறியவன் ஒருவன் கெடாத பெரிய நிதியினை பெற்றான்போல் மனம் தழைத்தார். இவர் திருவடி தீக்கை பெற்ற செய்திக்கு இத்திருத்தாண்டகம் பெரிய அகச்சான்றாகும். தமிழ் மாலை சாத்திக்கைத் திருத்தொண்டுகள் செய்து பலநாள் திருநல்லூரில் தங்கினார். அந்நாளில் திருக்கருகாவூர் முதலாக அருகில் உள்ள பதிகளிற் சென்று வணங்கிக் கொண்டு திருநல்லூரை ஒருகாலும் பிரியாதே உள்ளுருகிப் பணிந்து வந்தனர்.

## திருவடி தீக்கை

திருவடி தீக்கைப் பேற்றின் தன்மையும் பெருமையும் பற்றிப் பல இடங்களில் நாயனார் அருளியிருக்கின்றார்.

**'முருகார் நறுமல ரீண்டைதழுவி வண்டேமுரலும்**
**பெருகா றடைசடைக் கற்றையி னாய்பிணி**
**மேய்ந்திருந்த**
**இருகாற் குரம்பை, யிதுநா னுடைய திதுபிரிந்தால்**
**தருவா யெனக்குன் றிருவடிக் கீழோர் தலைமறைவே'**

அரசு-தேவா

இருகாற் குரம்பை என்பது உடம்பு, குரம்பை- கூடு. இது நான் உடையது. இது ஒரு பண்டம் என்னுடையது. இது பிரிந்தால்...தலை மறைவே: இந்த உடம்பு பிரிந்து போனால் என் உயிர் தங்குதற்கு உனது திருவடியின் கீழே ஒருதலை மறையும்படியான இடங்கொடு: தலைமறைவு: அகன்ற இடம் எதுவும் வேண்டியதில்லை. தலைமறையும் இடம் மட்டும் போதும். என்று இலேசாற் கூறியபடி. இனி நான் உடையது **"நான்"** என்னும் அகங்காரத்தையும் (அதனோடு இனமான **எனது** என்னும் மமகாரத்தையும்) உடையது. இது பிரிந்தால் இந்த அகங்கார மமகாரங்கள் நீங்கினால், தருவாய்..... தலை மறைவே-உன் திருவடியின் கீழே **தாடலை** போல மறைந்து ஒன்று சேர்ந்து நிற்கும் தன்மை தருவாய் என்று ஒருபொருளும் குறிப்பும் பெற நின்றது காண்க. இப்பொருளில் **தலைமறைவு** என்பதற்குத் தலை என்னும் மொழியின் தலை எழுத்தாகிய தகரம் மறைந்து தாள் என்பதன் ஈற்று ளகர ஒற்றுடன் மயங்கி ஒன்றாகித் தன் தனிநிலை தோன்றாவண்ணம் மறைந்து நிற்பது என்பது பொருள்.

## தாடலை

இதனைத் தாடலை என்று சம்பிரதாயக் குறயீடாக ஞான சாஸ்திரங்களில் கூறுவது மரபு.

**'தாடலைபோற் கூடியவை தானிகழா வேற்றின்பக்**
**கூடலைநீ யேகமெனக் கொள்'**

திருவருட்பயன்-8 இன்புறு நிலை-4

இவ்வாறு திருவடியினுள்ளடங்கி நிற்பவர் களுடைய தன்மையைப் பற்றி

**'ஓங்குணர்வி னுள்ளடங்கி யுள்ளத்து**
**ளின்பொடுங்கத்**
**தூங்குவர்மற் றேதுண்டு சொல்'**

-10,அணைந்தோர்தன்மை-1

என்பதாதியாக விதந்தோதப் பெற்றுள்ளது. அவர்களே சலியாத பரம சுகத்தை அடைந்தனுபவித்திருப்பவர்கள்.இவர்களுடைய உணர்வு எல்லாம் பரம சிவத்தினுடைய ஓங்குணர்வினுள் ஒடுங்கும். அவர்களுடைய பரம சுகம் இவர்களுள்ளத்தில் நிறையும். அது சலியாது. அந்த இன்பத்தை அனுபவித்துக் கொண்டே இருப்பர். உலகச்சேட்டைகள் இவர்களை வந்து தாக்கா: ஒன்றும்செய்ய வலியிலவாய் ஒதுங்கி நிற்கும்.

**பீலிபெய் சாகாடும் அச்சுஇறும் அப்பண்டம்**
**சால மிகுத்துப் பெயின்** 475

*மயிலிறகு ஏற்றிய வண்டியும், அப்பொருளை (அளவோடு ஏற்றாமல் வண்டி தாங்கும்) அளவுக்கு மிஞ்சி ஏற்றினால் அச்சு முறியும்.*

இந்த நிலை பெறுவதற்குத் தீக்கை இன்றியமையாத சாதனமாம். இறைவர் தாம் குருவை அதிட்டித்து வந்து அவ்வவர் பக்குவத் துக்குத்தக்கபடி தீக்கை செய்பவர். பார்வை,பாவனை, பரிசம், வாசகம், என்பன முக்கியமான தீக்கை வகைகள். இன்னும் பலவகையுண்டு. ஈண்டு நமது நாயனாருக்கு இறைவரே திலகவதியம்மையாரை அதிட்டித்து நின்று பார்வை பாவனை வாசகம் என்ற தீக்கைகள் செய்தருளினர். பரசமயக் குழி நின்றும் மேலேறி ஈடேற வேண்டும் என்பது பாவனை. தம்மை வந்தடைந்தபின் அதற்கேற்ற பார்வை சூலை நோய் உன்வினை கழுவ இறைவரருளிய கழுவாயாகிய இன்னருள். அவரைஅடைந்து பணிசெய் என்று அழைத்துக் கொண்டு போய் திருமுன்பு விட்டது வாசிகம். திருநீற்றை அஞ்செழுத்து ஓதிக்கொடுத்தது உபதேசமும் உடலும் உயிரும் பரிசுத்தமாதற் பொருட்டுக் கொடுத்த சாதனமுமாக என்றிவ்வாறு கண்டு கொள்க. இவை முன்னர் விரித்துரைக்கப் பட்டன.

**கற்றீண்டு மெய்ப்பொருள் கண்டார் தலைப்படுவர்**
**மற்றீண்டு வாரா நெறி**

என்ற திருக்குறளுக்கு உரை செய்ய வந்த ஆசிரியர் பரிமேலழகர் **"இம்மக்கட் பிறப்பின் கண்ணே உபதேச மொழிகளை அனுபவமுடைய தேசிகர்பாற் கேட்டு அதனால் மெய்ப்பொருளை உணர்ந்தவர். மீண்டும் இப்பிறப்பின்கண் வளராத நெறியை எய்துவர். ஈண்டு வரா நெறிவீட்டு நெறி"** என்றெழுதினார் அவ்வுபதேச மொழிகள் முதலியவற்றை மேலே கண்டோம்.

**நெறி-தலைப்படுவர்:** என்பதற்கு எய்துவர் என்பதல்லாமல் அந்நெறியில் நிற்பர், ஒழுகுவார் என்பது பொருள். இது பற்றிச் சிவஞான போதம் முதலிய சிவாகமங்களிலும் ஞானநூல்களிலும் விரிவாய்ப் பேசப்பட்டுள்ளது. தமது முதல்வனே குருவாக வந்து முன்னைத் தவத்திற்குத் தக்கவாறு நீ - தகாதசார்பினில் வளர்ந்து துன்பப் படுகின்றாய். என்று உணர்த்துவன. அவ்வாறு உணர்த்தவே தமது முன்னைய பொய்சார்புகளை எல்லாம் விட்டு நீங்குவன. அப்படி முன்னைச் சார்புகளின் நீங்கிய பின் வேறு சார்பில்லாமையால் அரன் கழல் சாரும் ஆன்மா ஞானக்கண்ணினாலே அரனைச் சிந்தையுள் நாடி நிற்ப ஆதனாலே பேய்த்தேர் போலப் பாசங்கள் நீங்கவே தண்ணிய திருவடி நிழலில் நிற்பன். விதிப்படி திருவைந் தெழுத்தை எண்ணிக் கொண்டே அறநெறியில் வாழ்குவன்.இவ்வாற்றாற் பாச நீக்கமும் சிவப்பேறும் பெற்று வீட்டை அடைகுவன்.

அறநெறியில் நின்ற நாயனார் உடற்றூய்மை பெற இறைவரைச் சூலமும் இடபமும் பொறிக்க வேண்டிப் பெற்றுக் கொண்டார்.இறைவனது திருவடிதீக்கையும் வேண்டிப் பெற்றுக் கொண்டார். இவ்வாறு உரிய தீக்கைகளைப் பெற்றுக்கொண்ட வகையாலே ஈண்டு வாரா நெறியிற் தலைப்பட்டார். என்றிவ்வாறு இத்திருக்குறளின் கருத்தினை இப்பகுதியிற் பொருதி கண்டு கொள்க.

**நினைந்துருகு மடியாரை நைய வைத்தார்**
**நில்லாமே தீவினைகள் நீங்க வைத்தார்**
**சினந்திருகு களிற்றுரிவைப் போர்வை வைத்தார்**
**செழுமதியின் றளிர்வைத்தார் சிறந்து வானோர்**
**இனந்துருமி மணிமகுடத் தேறத் துற்ற**
**இனமலர்கள் போதவிழ்ந்து மதுவாய்ப் பில்கி**
**நனைந்தனைய திருவடியென் றலைமேல் வைத்தார்**
**நல்லூரெம் பெருமானார் நல்லவாறே.**

அரசு-திருத்தாண்டகம்- திருநல்லூர்-(1)

**The wheel of a bandy loaded only with peacocks' feathers will breath if it be greatly overloaded. 475**

# அன்பு என்னும் அரிய பண்பு

முருகவே பரமநாதன்

**கா**தல், அன்பு, ஈரம், பசை, நார், நயம் என்ற சொற்கள் ஒரு கருத்துப் பன்மொழிகள் இதைவிடப் பட்சம், பாசம், பிரியம், நேசம் என்பனவும் அன்பின் வழிப் பிரயோகங்கள், இன்னும் விரிவாய்ப் பார்ப்பதற்கு, கோசம் (அகராதி) நிகண்டு போன்ற ஏடுகளைப் புரட்ட வேண்டும். தமிழ் என்றாலே அன்பு என்றோர் பொருள் அமைவைத் திரு மூலர் தந்துள்ளார். **என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாகத் தமிழ் செய்யுமாறே** (திருமந்திரம் 81) என்பது அபிப்பிர யோகம். சில பதிப்புக்களிலே தமிழ்ச் செய்யுமாறே என்று காணப்படுகிறது. தமிழ்ச் செய்தல் என்பதற்கு அன்பு பாரித்தல், அன்பு செய்தல் என்றும் பொருள், வேறு அர்த்தமும் உண்டு. தமிழின் ஒரு பண்பு, இறைவனைத் திட்டினாலும், ஏசினாலும், பேசினாலும், பயன்தரும், மாதிரிக்கு அருணகிரியாரிடம் கேட்போம். மொய்தார் அணிகுழல் வள்ளியை வேட்டவன் முத்தமிழால் வைதாரையும் அங்கு 'வாழ வைப்போன்" என்பது கந்தரலங்கார வாசகம். இன்று மனிதநேயம் பற்றி வரிவரியாக பிரவசனம் செய்கிறார்கள், கவிஞர் கவிதை பண்ணுகிறார். ஊடகங்கள் பிச்சுவாங்குகின்றன. ஆனால் மருந்துக்குக் கூட இல்லை. பார்க்க வேண்டுமானால் இந்து ஆலயம் சென்றாற் புரியும். திருமூலர் அன்பு பற்றி எழுத எழுத்தாணி எடுத்தபோழ்து நன்றாக" என்ற பதம் சிந்தனை வழி எழுத்தாணியின் நுனியிற் சிந்தியிருக்கிறது. எனவே என்னை. நன்றாக எனவும் தன்னை நன்றாக எனவும் தீட்டியுள்ளார். இதுவும் ஒரு உரிப்பொருள் தான். இந்த அன்பு பற்றிப் பேசும்போது பாசம் பற்றியும் வந்துவிட்டது. தாயோடிணைந்தாற் தாய்ப்பாசம். இது சந்ததி சந்ததியாய்க் கொடிவிட்டுக் கொண்டிருக்கிறது. அது கொப்பூழோடு தொடர்பான இரத்த உரிமை. உரிமை - சொத்து, சொம் (முதுசொம்) தாயன்பு,. அதுதான் வாத்ஸல்யம். பாசம் என்றாற் கயிறு என்றும் பொருள். யமனிடம் இருப்பது பாசக்கயிறு. ஈவிரக்கம் இல்லாமல் எம்மை ஈர்த்துச் செல்ல அது பயன்படும், ஈவிரக்கமற்றவனவன். மனிதனிடம் கூட அ∴துவற்றிவரண்டு போயிற்று. அப்பாடி யார் பொறுப்பு அதற்கு. அம்தண்மையுடையவர் அந்தணர் அம் - அழகிய, தண்மை - குளிர்ச்சி, பாசம் என்றால் ஆசையென்றும் பொருள்படும். ஆசைதான் காமம். காமம் உள்ள இடத்திலே இராமன் இரான். எல்லாவற்றையும் காய்ந்தவன் சிறிய திருவடி (ஆஞ்சநேயர்). அவனோடு இராமன் இருப்பான். நல்ல மாதிரி இருந்துகொண்டு குழியைப் பறிப்பது காமம். எனவே ஹித சத்துரு என்றோர் பெயர் அதற்குண்டு. வலிந்த சேர்க்கை இதால் வந்ததுதான். அன்பு - ஒரு கயிறு (பாசம்). அது அறுக்க முடியாத அசல் நைலோன் கயிறு தான். இரு உள்ளங்களிடையே ஏற்படும் மனக் குழைவே அன்பு, ஒரு மென்பதம். அதன் பண்பும் உயரியது தான். மனிதனிடம் மட்டுமன்றிப் பல உயிரினங்களிலும் அன்பு தங்குதடையின்றிப் பாய்கிறது. கன்னங்கரிய காக்கை, சின்னஞ்சிறிய சிட்டு பிள்ளைக்கு உணவுதீற்றுகிறது. பென்னம் பெரிய பசு கன்றை நினைந்து பால் சொரிகிறது. எனவே பால் நினைந்தூட்டும் தாய் மனிதத்தாய். மணிமொழியார் (வாதவூரர்) போற்றிப்புகழ்ந்த தாய். அது தான் தாய்மையின் தனிச் சிறப்பு. இன்று முலைப்பாற்குப் பஞ்சம். இந்த அன்பைச் செந்தமிழிலே வள்ளுவர், சமணமுனிவர்கள், நால்வர், திருமூலர், கம்பர் போன்ற பலர் படம்பிடித்துக் கவி பண்ணியுள்ளனர். மாணிக்க வாசகரின் திருவாசகம் இப்படிப் பொழிகிறது. வாசகம் - வாக்கு.

**நுனிக்கொம்பர் ஏறினார் அ∴துஇறந்து ஊக்கின்**
**உயிர்க்குஇறுதி ஆகி விடும்** 476

*ஒரு மரத்தின் உச்சிக்கிளையில் ஏறி நின்றவர், தம் ஊக்க மிகுதியால் அதையும் கடந்து மேலும் ஏற முயன்றால், (அம்முயற்சியால்) அவர் உயிர்க்கு முடிவு நேர்ந்து விடும்.*

தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
அன்பருக்கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
அன்பெனும் ஆறு கரையது புரள
ஆற்றல்மிகு அன்பால் அழைக்கின்றிலேன்
தீர்ந்த அன்பாய அன்பர்க்கு அவரினும் அன்பபோற்றி
நான்தனக்கன் பின்மை நானும் தானும் அறிவோம்
அன்பெனும் பிடியுள் அகப்படும் மலையே.

இன்னும் தேவைப்படின் திருவாசத் தேன்நூலை ஒருதரம் பிரித்துப் பார்த்தாற் புரியும், தெரியும். உலகிலே அன்பின் பிடிப்பு இப்படியும் இருக்கலாம். தாய்சேய் உறவு, கணவன் மனைவி இறுக்கம், காதலர் இருவர் இதயதாகம், அரசன், குடிமக்கள் நேயம், ஆசான் மாணவன் பிடிப்பு, குருசீடன் தொடர்பு, இரு நண்பர்களின் இணக்கம், மூத்தவர் இளையவர் உறவு, குழந்தைகள் கூட்ட நயம். இப்படிச் சேர்த்துப் பார்த்தால் அன்பின் பாவம், முத்திரை புலப்படும். பாரதியின் பார்வையில் அன்பு.

தீரத்திலே படைவீரத்திலே - நெஞ்சில்
ஈரத்திலே உப காரத்திலே
சாரத்திலே மிகு சாத்திரங்கண்டு
தருவதிலே உயர்நாடு
அன்பென்று கொட்டு முரசே, அன்பு மிகுந்த
தெய்வம் உண்டு
உயிர்கள் இடத்தில் அன்பு வேண்டும்
அன்பு சிவம் உல கத்துயர் யாவையும்
அன்பினிற் போகும் என்றே - இங்கு
முன்பு மொழிந்துல காண்டதோர் புத்தன்
மொழி எங்கள் அன்னை மொழி

பாரதி பாடல்கள்

உலகையே, உயிர்க்குலத்தையே இணைத்துப், பிணித்து வைத்திருக்கும். அன்பின் பக்குவம் பெரிதுதான். ஆனால் அதற்கு வடிவம் என்ன, வண்ணம் என்ன என்று கேட்டாற் பதில் சொல்ல முடியுமா. அன்பு என்னும் மூன்றெழுத்து மலருக்கு வடிவமே இல்லை, வண்ணமே காணோம், நிறம், குணம் உண்டா? இது ஒரு பண்புப் பெயர். இதையுடையோர் பண்பிகள், அன்பர்கள். இ∴தே போன்று அறிவு, அழகு இவற்றுக்கும் வடிவமில்லை. ஆனால் அன்பின் வெளிப்பாடு. அழகின் கோலம், அறிவின் திறம் பளீச்சிடும்போது அறிய, அனுபவிக்க, போற்ற முடிகிறது. அன்புக்கு வடிவம் இல்லை. ஆண்டவனுக்கும் வடிவம் இல்லை. எனவே சைவசமயிகளாக நாம் வணங்கும் தெய்வத்தை அன்பே சிவம் என்றார் திருமூலர்.

அன்பு சிவம் இரண் டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே.

திருமந்திரம் 270

அன்பின் வழியதுயிர்நிலை, இந்த உடலோடி ணைந்த உயிரைத் தாங்கிய மனிதம் பேண வேண்டிய அன்பு, எங்கும் எதிலும் நிறைந்திருக் கிறது. சருக்கரையாற் செய்த பொம்மைபோல ஆண்டவன் தித்திக்கிறான். அன்பே வடிவமான அவனை அன்பு செய்வதால் அன்போடு அன்பாய் நாம் கரைந்து விடுவோம். நீரோடு நீர் சேர்ந்ததுபோலப் பிரிக்க முடியாது. பிறிவிலாதது இந்தத் தொடரிலே திருமூலர். அன்பின் பெருக்கை, ஈரத்தின் சாரத்தைவாரத்தின் (அன்பு) பெருமையை எம் நெஞ்சிற்போட்டு வைக்கிறார்.

**There will bean and to his life who, having climbed out to the end of a branch ventures to go further.**

**476**

**என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**

**பொன்போற் கனலிற் பொரிய வறுப்பினும்**

**அன்போ டுருகி அகங்குழைவார்க்கன்றி**

**என்போல் மணியினை எய்தவொண் ணாதே**

திருமந்திரம் 272

எத்தனையோ நேமங்கள், நிட்டைகள், விரதங்கள், அபிடேகங்கள், அர்ச்சனைகள், ஆராதனைகள், பாற்குடங்கள், வெற்றார வாரங்கள். எனவே எம் போலமைந்த இறைவனைக் காண அன்பு தான் நல்ல ஏணி என்பது திருமூலர் முடிவு ஆர்வம். அக்கறை, விருப்பம், சிரத்தை, விருப்பம் உள்ளவர்கள் இறைவனைக் காண்பர் என்ற உண்மை அடுத்த மந்திரத்திற் தொடர்கிறது.

**ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை**

**ஈரம் உடையவர் காண்பர் இணையடி**

**பாரம் உடையவர் காண்பர் பவந்தன்னை**

**கோர நெறிகொடு கோங்கு புக்காரே**

திருமந்திரம் 273

ஆர்வம் - விருப்பம், அக்கறை, அரன்- சிவன், அடி - திருப்பாதங்கள், ஈரம் - இரக்கம், அன்பு, இணையடி-இருபாதங்கள், பாரம்-பொறுப்பு, சுமை, கடமை, பணிசெயும் மனப்பாங்கு, கனதி, - பவம் - பிறவி கோங்கு - கோங்கு என்னும் நரகம். ஆகநாம் ஈரம், பாரம், ஆர்வம் உடையவர்களாய் இறைபக்தி பண்ணினால் பிறவியறும் என்பது வெளிப்படை. யார் அன்பால் உறுதி. இறைபக்தி இயற்றுகிறார்களோ. அவர்களை நாடி இறைவனே வருவானென்ற அநுபூதி நிலையை இனி வரும் பாடல் விளக்குகிறது.

**என்னன் புருக்கி இறைவனை ஏத்துமின்**

**முன்னன் புருக்கி முதல்வனை நாடுமின்**

**பின்னன் புருக்கிப் பெருந்தகை நந்தியும்**

**தன்னன் பெனக்கே தலைநின்ற வாறே**

திருமந்திரம் 274

தலை நிற்றல் - தன்னிடம் வந்து சேர்தல், ஆட்படுதல்.

இந்த அன்பு நெறி பக்தியோடு குழைந்தது. பக்தியால் யானுனைப் பற்றியே மாதிருப்புகழ் பாடி, உத்தமாமாறெனக்கருள்வாயே என்பது திருப்புகழ். பக்திப் பெருக்கின் சிறப்பைப் பாரதி இலகு மொழியிலே பாடுகிறார்.

பக்தியினாலே - தெய்வ பக்தியினாலே.

**பக்தியினாலே - இந்தப்**

**பாரினி லெய்திடும் மேன்மைகள் கேளடி!**

**சித்தந் தெளியும் - இங்கு**

**செய்கை யனைத்திலும் செம்மை பிறந்திடும்**

**வித்தைகள் சேரும் நல்ல**

**வீரருறவு கிடைக்கும் - மனத்திடைத்**

**தத்துவம் உண்டாம் - நெஞ்சிற்**

**சஞ்சலம் நீங்கி உறுதிவிளங்கும்.**

**காமப் பிச்சைக் - குதி**

**கால் கொண்ட டித்து விழுத்திடலாகும், இத்**

**தாமசப் பேயைக் - கண்டு**

**தாக்கி மடித்திடலாகும் எந்நேரமும்**

வாழ்க்கை நூலாகத் திகழ்வது திருக்குறள். பொய்யா மொழி அன்பு பற்றிப் பேசும் அறிவிசை களை இனிக் காண்போம். உடமை என்னாற் செல்வம், பொருள், சொத்து என்று பொருள்படும். ஆக அன்புடைமை என்ற திருநாமம் அவ்வதிகாரத் துக்கு வழங்கப்பட்டுள்ளது. எனவே நாமும் அன்புடையவர்களாக வாழ்வோம். இல்லறம் என்னும் நல்லறம் செழித்தோங்க அன்பும் அறனும் இன்றியமையாதது அதுவே பக்குவமும், பிரயோச னமுமாம்.

**ஆற்றின் அளவறிந்து ஈக அதுபொருள்**
**போற்றி வழங்கும் நெறி**

477

*ஈகை நெறிப்படி, தன் செல்வத்தின் அளவறிந்து அதற்குத் தக்கவாறு அளவோடு ஈதல் வேண்டும். அதுவே செல்வத்தைப் பேணிக் காத்து, வழங்கி வாழும் வழியாம்.*

**அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை**

**பண்பும் பயனும் அது.**

குறள் 45

இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடைத்தாயின் ஒருவன் இல்வாழ்க்கை தன் துணைவி மேற் செய்யத்தகும் அன்பினையும், பிறர்க்குப் பகுத்து ண்டலாகிய அறத்தினையுமுடைத்தாயின் அது, பண்பும் பயனும் - அவ்வுடைமை அதற்குப் பண்பும் பயனுமாம்.

**இல்லாட்கும் கணவற்கும் நெஞ்சு ஒன்றாகாவழி இல்லறம் கடைபோகாமையின், அன்புடைமை பண்பாயிற்று, அறனுடைமை பயனாயிற்று.**

பரிமேலழகர்

பிறர் மாட்டு அன்பிலாதவர் பிறருக்கு நன்மை செய்யாதவர். அவர்களாற் சமுதாயத்துக்கு எள்ளத்தனை பயனும் இல்லாதவர். எனவே அவர்கள் சுயநலமிகள். அன்புள்ளோர் தம் என்பையும் பிறர்க்கு உவந்தளிப்பர் என்கிறார் வள்ளுவர்.

**அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்**

**என்பும் உரியர் பிறர்க்கு**

மேலது 72

இந்த உடம்பு உயிர் இன்றி இயங்காது, உயிருக்கு உடம்பு முக்கியம் தனியே தொழிற்படாது. உடம்புக்கு மெய்யென்று பெயர். உயிருக்கு ஆவியென்றும் பெயர். மெய்யெழுத்துப் பதினெட் டும், உயிரெழுத்துப் பன்னிரெண்டும் சேர்ந்ததே தமிழ் நெடுங் கணக்கு. இந்த உடம்போடிணைந்த உயிர் வாழ்வில் அன்பு விசும்பாவிடின் அ்.து வெற்றுபம்பே இந்த அன்பு இல்லாச்சரீரம். எலும்புக் கோவைக்கு மேற்தோலாலே போர்த்த போர்வை யாக அமையும் உயிர் அங்கே பெறுமதியற்றுப் போகிறது.

**அன்பின் வழியது உயிர்நிலை அ்.திலார்க்கு**

**என்புதோல் போர்த்த உடம்பு**

குறள் 80

அன்பின் வழியே அமைதியான ஆத்மீகபாதை, அருள் தான் அன்பின் குழந்தை. அன்புதாய் - அருள்குழலி என்பதை நாம் உணர வேண்டும்.

**அருளென்னும் அன்பீன்குழலி பொருளென்னும்**

**செல்வச் செவிலியால் உண்டு**

குறள் 757

எனவே இவ்வுலக வாழ்வின் செழிப்புக்கு அன்புநீர் பாய்ச்சுவோம். அன்பே வடிவான அவனடிபேணி எல்லையில் இன்பம் அடைவோம்.

**அரும்பொனே மணியேஎன்அன்பேஎன் அன்பான**
**அறிவேஎன் அறிவில் ஊறும்**
**ஆனந்த வெள்ளமே என்று என்று பாடினேன்**
**ஆடினேன், நாடிநாடி**
**விரும்பியே கூவினேன், விலறினேன், அலறினேன்**
**மெய்சிலிர்த்து இருகை கூப்பி**
**விண்மாரி எனஎன்இரு கண்மாரி பெய்யவே**
**வேசற்று அயர்ந்தேன்யான்**
**இரும்புநேர் நெஞ்சகக் கள்வன் ஆனாலும் உனை**
**இடைவிட்டு நின்றது உண்டோ?**
**என்றுநீ அன்றுநான் உன் அடிமை அல்லவோ?**
**யாதேனும் அறியா வெறும்**
**துரும்பனேன் என்னினும் கைவிடுதல் நீதியோ?**
**தொண்டரொடு கூட்டுகண்டாய்**
**சுத்தநிர்க்குணமான பரதெய்வமே பரம்**
**ஜோதியே சுகவாரியே!**

தாயுமானார் பாடல் - சுகவாரி 7

**Let a man know the measure of his ability (to give) and let him give accordingly, such giving is the way to preserve his property.** **477**

# சைவ அபரக்கிரியை

சென்ற இதழின் தொடர்ச்சி..............

சிவபெருமான் - அபிஷேகத்தாலும், விஷ்ணு அலங்காரத்தாலும் பிதிர்கள் - தர்ப்பணத்தாலும் மகிழ்வர்.

## சிராத்த வகைகள்

**நித்திய சிராத்தம்:-**

நாள்தோறும் பிதிரைக் குறித்துச் செய்யப்படும் தர்ப்பணம்.

**நைமித்திய சிராத்தம் :-** தந்தை, தாயார் இறந்த மாதம் திதியில் வருடம் தோறும் விதிப்படி செய்வது.

**காமிய சிராத்தம் :-** அமாவாசை, சூரிய கிரணம், சந்திர கிரணம், விதிபாத யோகம், உத்தராய ணம், சித்திரை விஷு மாதப்பிறப்பு, வைகாசி வளர்பிறைத் திரு தியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திருதியை, கார்த்திகை வளர்பிறை நவமி, புரட்டாதி தேய்பிறைத் திரயோதசி, மாசி அமாவாசை ஆகிய தினங்களில் புண்ணிய தீர்த்தங்களில் நீராடிப் பிதிர்தர்ப்பணம் செய்து அதிதிகள் சுற்றத்தா ரோடு போசனம் செய்வது. இது தீர்த்த சிராத்தமெனப்படும்.

**விருத்தி சிராத்தம்:-** இது நாந்தி சிராத்தம் என்றும் கூறப்படும். சீமந்தம், சாதகர்மம், நாமகரணம், அன்னப் பிராசனம், விரதம், விவாகம், கிருகா ரம்பம், கிருகப் பிரவேசம் போன்ற சுப கருமங்களில் பிதிர் தேவர்களைக் குறித்துச் செய்யும் சிராத்தம் விருத்தி சிராத்த மாகும். பிதிர்களின் ஆசீர்வாதம் பெறும் பொருட்டுச் செய்யும் இச்சிராத்தம் மங்கள சிராத்தம் எனவும் கூறுவர்.

**காயா சிராத்தம் :-** காயாவில் சிராத்தம் செய்து பிண்டமிட்டு பிதிர்களைத் திருப்திப் படுத்துவதால் ஏழு கோத்திரத்தில் உள்ள நூற்றியெழு குலமும் விருத்தியாகும். (பிதா வின் குலம் இருபத்து நான்கு, மாதாவின் குலம் இருபது, மனைவி குலம் பதினாறு, சகோதரி குலம் பன்னிரண்டு, மகள் குலம் பதி னென்று, பிதாவின் சகோதரி குலம் பத்து, மாதாவின் சகோதரி குலம் எட்டு ஆரக் குலம் நூற்றொன்று). காசி, காஞ்சி, மாயை, மதுரை, அவந்தி, அயோத்தி, துவாரகை ஆகிய முத்தித்தலம் ஏழிலும் ஏனைய புண்ணியத் தலங் களிலும் சிராத்தம் செய்வது மிகுந்த புண்ணிய மாகும்.

**ஆசௌச காலத்தில் சிராத்தம்வரின் :-** சனன மரண ஆசௌசத்தில் சிராத்ததினம் வந்தால் ஆசௌசம் நீங்கும் நாளில் சிராத்தம் செய்தல் வேண்டும். விதவை தான் வீட்டுக்கு விலக்காய் இருக்கும்போது தன் கணவனுடைய சிராத்தம் வந்தால் ஐந்தாம்நாள் சிராத்தம் செய்யக் கடவர். சிராத்தத்திற்குப் பாகம் பண்ணத் தொடங்கிய பின் ஆசௌசம் வந்தால் அது கர்த்தாவைப் பற்றாது.

**சிராத்தத்திற்கு ஆகுந்திரவியங்கள்:-** நெல்லரிசி, கோதுமை, யவம், சிறுபயறு, உழுந்து, எள்ளு, சக்கரைவெல்லம், தேன், நல்லெண்ணை,

**ஆகுஆறு அளவுஇட்டிது ஆயினும் கேடில்லை**
**போகுஆறு அகலாக் கடை** 478

*பொருள் வரும்வழி (வருவாய்) அளவில் சிறியதாக இருந்தாலும், போகும் வழி (செலவு) விரிவுபடா விட்டால் கெடுதல் இல்லை.*

பசுப்பால், பசுத்தயிர், பசுநெய், சிகைக்காய், மிளகு, சீரகம், மஞ்சள்,கடுகு, உப்பு, புளி, வாழையிலை,வாழைத்தண்டு, வாழைக்காய், வாழைப்பழம், மாங்காய், மாம்பழம், பலாக்காய், பலாப்பழம்,தேங்காய், இளநீர், பாகற்காய், முள்ளிக்காய், கத்தரிக்காய், வெள்ளரிக்காய், புடலங்காய், அவரைக்காய், நெல்லிக்காய், எலுமிச்சம்பழம், சிறுகிழங்கு, பெருவள்ளிக்கிழங்கு, இஞ்சிக்கிழங்கு, கீரை, முல்லையிலை, முசுட்டையிலை, காரையிலை, பிரண்டை, சேப்பந்தண்டு, சேப்பங்கீரை, சேப்பங்கிழங்கு, கருவேப்பிலை, வெற்றிலை,பாக்கு, ஏலம், சுக்கு, கிராம்பு, சாதிக்காய், சாதிபத்திரி

**சிராத்தத்திற்கு ஆகாத திரவியங்கள்:-** கடலை,துவரை, வெண்கடுகு, பெரும்பயற்றங்காய், பீர்க்கங்காய், அத்திக்காய், முருங்கக்காய், பூசனிக்காய்,கத்தரிக்காய், சுரக்காய், வாழைப்பூ, முள்ளங்கி, வெங்காயம், வெள்ளைப்பூடு, எருமைப்பால், எருமைத்தயிர், எருமைநெய், ஆட்டுப்பால், ஆட்டுத்தயிர், ஆட்டுநெய்.

**சிராத்தத்திற்கு ஆகும் பத்திர புஷ்பம்:-** வில்வம், துளசி, அறுகு, சம்பகப்பூ, தாமரைப் பூ, புன்னைப் பூ, முல்லைப்பூ, நந்தியா வர்த்தப்பூ, மருக் கொழுந்து வெட்டிவேர், எட்பூ.

**ஆகாத புஷ்பம்:-** மகிழம்பூ, தாழம்பூ, அவரிப்பூ, சிறுசண்பகப்பூ, கர்த்தாவும் சிராத்தத்தின் பொருட்டு வரிக்கப்பட்டு வரும் சிராத்த தினத்திலும் முதற் தினத்திலும் மறுதினத்திலும் சவரஞ் செய்து கொள்ளுதல், மீண்டும் புசித்தல், வழி நடத்தல், பாரஞ்சுமத்தல், கோபம், பொய், காமம் இவை களைத் தவிர்த்து விரத நியமமுடையவராய் இருத்தல் வேண்டும். விரத நியமம் தப்பிப் புணர்ச்சி முதலியவற்றைச் செய்தவர் நரகத்தில் விழுந்து வருத்துவர். கர்த்தா இம்மூன்று தினத்திலும் எண்ணெய் தேய்த்துக் கொள்ளலும், பரான்னம் புசித்தலும், வெற்றிலை பாக்கு உண்ண லும், மருந்து உண்ணலும் ஆகாவாம்.

சிராத்த தினத்தில் வீட்டிலே தயிர் கடைத லும், நெற்குத்துதலும், பிச்சை போடலும், எண்ணெய், நெல் முதலிய பொருட்களைக் கொடுத்தல் வாங்குதலும் ஆகாவாம்.

சிராத்த தினத்திலே திருக்கோயிலிலே கடவுளுக்குத் தன்னால் இயன்ற மட்டும் அபிஷேகம் பூசை திருவிளக்கேற்றுதல் முதலியன செய்தல் வேண்டும். பசுவிறகுப் புல்லுப் போடல் வேண்டும்.

சிராத்தம் நடக்கும்போது வேதத்தையும், திருமுறைகளையும், புராண, இதிகாசங்களையும், தரும சாத்திரத்தையும் சிராத்தம் வாங்கு வோருக்குக் கேட்கும்படி படிப்பித்தல் வேண்டும். இது பிதிர்களுக்கு மிகப் பிரியமாகும்.

சிராத்தத்திலே கண்ணீர்விடுதலும், கோபித் தலும், பொய் சொல்லுதலும், துரிதஞ் செய்தலும், சிந்திய அன்னத்தைக் காலாலே மிதித்தலும், இலையிலே அன்னத்தைத் தூவிப் பரிமாறலும் ஆகாவாம். சிராத்தமேற்பவர் நன்று தீது என்று பேசாது திருப்தியோடு ஏற்றல் வேண்டும்.

சிராத்தத்திற்குப் பொருள் இல்லாதவன் காய், கனி, கிழங்கு, எள் இவைகளையேனுஞ் சற்பிராமணருக்குக் கொடுத்து நமஸ்காரஞ் செய்து தில தர்ப்பணம் பண்ணிக் (திலம்-எள்ளு) கொண்டு தான் திருப்தியாகப் போசனம் பண்ணல் வேண்டும்.

**Even though the income (of a king) be small, it will be no loss (to him), if his outgoings be not large. 478**

# ஜயமிட்டுண்

க.யோகேஸ்வரி

ஒரு கிராமத்தில் பாக்கியம் என்றொரு வயோதிபப் பெண் தனித்து வாழ்ந்து வந்தாள். குழந்தைகள் இல்லாத அவளுடைய கணவன் சில வருடங்களின் முன் காலமாகி விட்டார் என்றும் அதன் பின்னர் அவள் ஒருவரையும் தன்னுடன் சேர்த்துக் கொள்ளவில்லை என்றும் அவரைத் தெரிந்தவர்கள் கூறுவார்கள்.

இயல்பாகவே கஞ்சத்தனம் மிகுந்த பாட்டிக்கு பணம் செலவழித்துச் சமைத்து உண்பதற்கு விருப்பமில்லை. தன்னுடைய பெயரில் வங்கியில் இருக்கும் பணத்தைப் பெருக்குவதே அவளுடைய குறிக்கோள்.

இந்த தள்ளாத வயதில் ஏன் தனித்து இருக்கிறீர்கள்? வசதிகுறைந்த பிள்ளையை உதவிக்கு வைத்துக் கொண்டீர்களானால் உங்களுக்கு உதவியாக இருக்குமே என்று வேண்டியவர்கள் சொல்லுவார்கள். என்னிடமே வசதியில்லை, நான் எப்படி இன்னொரு ஆளுக்கு சோறிட முடியும்? என்று அப்பட்டமான ஒரு பொய்யைச் சொல்லி சமாளித்து விடுவாள் பாட்டி.

நல்ல உணவை உண்ண விருப்பம் இருந்தும், தனது கஞ்சத்தனத்தால் பாட்டி பட்டினி கிடப்பாள் என்பதைப் பலர் அறிவார்கள். யாராவது பிச்சை என்று வாசலில் வந்து கேட்டால் தகாத வார்த்தைகளால் திட்டி அனுப்புவாள். பாட்டியின் குணத்தால் யாருமே அவளுடைய வீட்டிற்குப் போவதற்கு விரும்ப மாட்டார்கள். மற்றவர்களை ஆதரித்து, இன்சொல் கூறி வரவேற்கும் பழக்கம் அவளிடம் இல்லை.

அதே கிராமத்தில் சிவபக்தையான பார்வதி என்ற ஒரு பாட்டி தனது கணவனுடன் வாழ்ந்து வந்தாள். அத்தம்பதியினர் பாக்கியம் பாட்டிக்கு மாறு குணமுடையவர்கள். தாம் உண்ணும் உணவின் ஒரு பகுதியை வருபவர்களுக்குக் கொடுத்து மகிழும் சுபாவம் உடையவர்கள். இவர்களை ஊரார் மெச்சுவார்கள். அதனால் பாக்கியம் பாட்டிக்கு அவர்கள் மீது உள்ளூரப் பொறாமை இருந்தது.

பிள்ளை குட்டி இல்லாதவர்கள் இப்படி செலவழிக்கிறார்களே? ஒருவருக்கு ஒன்று நடந்து விட்டால் இவர்களை இந்த ஊரார் வந்து கவனிப்பார்களா? எப்படி இவர்கள் காலம் போகிறது? நானும் இந்தக் கிராமத்தில் இருப்பேன் தானே. அப்போது அவர்கள் கஷ்டத்தைப் பார்க்கப்போகிறேன் தானே என்று தனக்குள் எண்ணியவாறு இருந்தாள்.

அவள் நினைத்தது போலவே பார்வதிப் பாட்டியின் கணவர் திடீர் என்று காலமாகி விட்டார். அதைக் கேள்வியுற்ற பாக்கியத்திற்கு இனிப் பார்வதி எப்படிக் காலம் தள்ளப் போகிறாள்.பார்க்கலாம் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

பாக்கியம் நினைத்து போலப் பார்வதி கவலைப் படவில்லை. தன்னிடம் உள்ள சொற்ப பணத்தைக் கொண்டு வாழலாம் என்ற மனத்துணிவு அவளுக்கு ஏற்பட்டது.அவளுடைய நல்ல குணத்தால் கவரப்பட்ட பலர் தனித்து நின்ற பர்வதியிடம் வந்து போவார்கள். அன்போடு தாம் சமைக்கும் உணவைக் கொண்டு வந்து கொடுத்தார்கள். பிறருக்குக் கொடுத்து உண்டு மகிழ்ந்த நல்ல பண்பு உங்களிடமிருந்து தான் எங்களுக்கு வந்தது. நாம் கொண்டு வரும் உணவை வேண்டாம் என்று சொல்லாமல் உண்ண வேண்டும், என அன்பாகக் கேட்டார்கள். அவளின் காலம் சந்தோஷமாகச் சென்றது.

பாக்கியம் பாட்டி நோய்வாய்ப்பட்டாள். அவளிடம் யாருமே செல்லவில்லை. தனித்து விடப்பட்டாள். வங்கியில் இருந்த பணம் பெருந் தொகையாயிருந்தது. ஆனால் அது எழுந்து வந்து உதவவில்லை. மனிதருடைய உதவி வேண்டும் என்பதை அந்நேரம் பாக்கியம் உணர்ந்தாள்.

இரப்பவர்களுக்குக் கொடுத்து தானும் உண்டு மகிழ்ந்த பார்வதிப் பாட்டி மனமகிழ்வுடன் வாழ்வதையும், தான் யாருமற்று அநாதரவாக வாழ்வதையும் பார்த்த பாக்கியம் பாட்டியின் மனம் வேதனைப்பட்டது. காலம் கடந்து ஏற்பட்ட மனமாற்றம், இதனால் எனக்கு நன்மையில்லை, என எண்ணினாள்.

ஜயமிட்டுண் என்று ஔவைப்பாட்டி கூறியபடி இரப்பவர்களுக்குக் கொடுத்து தாமும் உண்ண வேண்டும், என்ற வார்த்தைகளில் உள்ள பொருள் பாக்கியம் பாட்டிக்கு இப்போதுதான் விளங்கியது.

**அளவறிந்து வாழாதான் வாழ்க்கை உளபோல**
**இல்லாகித் தோன்றாக் கெடும்** 479

தன் செல்வத்தின் அளவறிந்து அதற்கேற்ப வாழாதவனுடைய வாழ்க்கை, பல வளங்களும் உள்ளன போலத் தோன்றி, உண்மையில் இல்லாதவனாய்ப் பின்பு அப்பொய்த் தோற்றமும் இல்லாது அழியும்.

# சைவபூஷணம்
# தமிழ் விளக்கம்

ஸ்ரீ மகாதேவர் தம்முடைய குமாரருக்குத் திருவுளம் பற்றியருளிய ஸ்காந்தம் காலோத்தரம் என்பவற்றினாலும், இன்னும் மகாதேவர் திருவுளம் பற்றியருளிய மகுடாகம வசனங்களினாலும் உண்டான புஷ்ப தாரதம்மியம் வருமாறு. சாமான்ய புஷ்பங்களினும் ஒரு அலரி புஷ்பம் அதிகம். அந்த அலரிப் புஷ்பம் ஆயிரத்தினும் ஒரு வெள்ளெருக்கம் புஷ்பம் அதிகம். அதினும் அதிகம் விஷ்வப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், மூன்று கிளையோ: கூடிய ஒரு வில்வம் அதில் ஆயிரத்தினும் அதிகம். ஒரு வெண்டாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம், நூறு இதழோடு கூடிய ஒரு செந்தாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம் ஆயிரம் இதழோடு கூடிய ஒரு செந்தாமரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தின் அதிகம் ஒரு நாயுருவிப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு தர்ப்பைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு முல்லைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு கண்டங்கத்திரிப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு சொக்கு மந்தாரைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், ஒரு ஊமத்தம் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு தும்பைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம், சங்கப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு பெருந்தும்பைப் புஷ்பம். அதில் ஆயிரத்தினும் அதிகம் ஒரு நீலோத்பல புஷ்பம். அது ஒரு வருடத்திற்கு நீர் மால்யமாவதில்லை. புஷ்பஜாதிக்குள் நீலோத்பலம் அதிகம் பத்திரஜாதிக்குள் மருக்கொழுந்து அதிகம். அதினும் அதிகம் வில்வபத்திர மென்றறிந்துகொள்க.

எண்ணிறந்த வருடங்கள் கங்காஸ்நானஞ்செய்த பலத்தைப் பரமசிவனுக்கு அருச்சித்த ஒரு வில்வதளம் தரும் என்றவாறாம். இதனால் வில்வதளத்திற்குச் சமமானதளம் (பத்திரம்) ஒன்றுமில்லையெ நன்கு விளங்குகின்றது. எல்லாவற்றிலும் பக்தியாகிய புஷ்பமேவிசேஷம். இவ்வாறு சிவாகமத்தில் கூறப்பட்டிருத்தல் காண்க. இன்னும் புஷ்பதாரதம்யம் சிவாகமங்களில் விரிவாகக் கூறப்பட்டிருப்பதை ஆங்காங்குக்கண்டு கொள்க.

வில்வம் வெள்ளைத்துளசி இவ்விரண்டும் ஒருவருடம் பூசைசெய்த பலனையும், எருக்கம்பூ ஆறுமாதம் பூசை செய்த பலத்தையும், அலரி மூன்று நாட்கள் பூசைசெய்த பலத்தையும் கொடுக்கும் என்பதாம்.

துளசி, வில்வம், பலாசம், சுவர்ணபுஷ்பம் என்னுமிவற்றை ஸ்ரீமகாதேவருக்குச் சாத்தி, மீளமீளக்கழுவி அர்ச்சிக்கலாம் என்பதாம். பஞ்ச வில்வங்களாலும் அர்ச்சிக்கலாம், அவையாவன, வில்வம், கிளுவை, மாவிலங்கு, விளா, நாயுருவி அல்லது நொச்சி என்பன. இவ்வாறறிந்து பூசைசெய்க. ஒவ்வொருநாளும் புதிதான புஷ்பங்ளைக் கொய்தல் வேண்டும்.

அருகு தரிப்பதற்கு மந்திரங் கூறுகின்றார்.

தூர்வாதேவியே ஆயிரங்கால்களையுடையவளே! என்னுடைய சிரசினால் தரிக்கப்பட்டவளாய்க் கொண்டு என்னுடைய அநேக பிறவிகளிலுண்டான பாவங்கைளப் போக்கி, எனக்கு மகா சௌந்தரியத்தையும் மகத்தான ஐசுவரியத்தையுந் தந்து என்னுடைய சத்துருக்களையெல்லாம் சங்கரிப்பாயாகவென்று சொல்லித் தரித்தல் வேண்டும்.

விஷ்ணுக்கிராந்தி தரிப்பதற்கு மந்திரங் கூறுகின்றார்.

**The prosperity of him who lives without knowing the measure (of his property), will vanish away and perish, even while it seems to continue.** **479**

விஷ்ணுககிராந்தியே? யென்னால் சிரசில் தரிக்கப்பட்டவளாய்க்கொண்டு, ஒவ்வொருநாளும் என்னை இரஷிக்க வேண்டும் என்பதாம்.

காட்டாத்தியைச் சூரியோதய காலத்திற்றரிசித்துத் தெரிவித்துக்கொள்ள வேண்டிதைக் கூறுகின்றார்.

ஓ விஷராஜனே! உமக்கு நமஸ்காரம். எனக்குச் சுத்தமான போஜனத்தைத் தந்தருளும். சத்துருக்களையும் நாசஞ்செய்வீராக என்பதாம்.

துளசி கிள்ளுதற்குரிமையில்லாத நாள்களிவையெனக் கூறுகின்றார்.

ஞாயிறு, திங்கள், செவ்வாய், வெள்ளி, இந்த நான்கு தினங்களிலும், சப்தமி. துவாதசி, சந்திரகிரகணம், சூரிய கிரகணம், திருவோண நஷத்திரம், விடியுங்காலம், சாயுங்காலம் ஐந்து பருவங்களாகிய கிருஷ்ணபஷத்து அஷ்டமி, கிருஷ்ணபஷத்துச் சதுர்த்தசி, அமாவாசை, பவுர்ணமி, மாசப்பிறப்பு ஆகிய இந்நாட்களிலும், விதீபாதயோகம், இரவு ஆகிய இந்தக் காலங்களிலும் புத்தி மானானவன் துளசியைக் கிள்ளுதல் கூடாது. புத்தியில்லாமல் கிள்ளினால் விஷ்ணுவினுடைய சிரசைக் கிள்ளியதோடொக்கும். இவனுக்குப் பிராயசித்தமில்லை.

வெள்ளிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை முதலிய விலக்கப்பட்ட தினங்களிலும், துவாதசியிலும், ஐந்து பர்வ தினங்களிலும், எவர்கள் துளசியைக் கொய்கிறார்களோ, அவர்கள் விஷ்ணுவினுடைய சிரசைக் கொய்கின்றனர் என்பதாம்.

கையில் கொண்டுவரப்பட்டதும், ஆடையிற் கொண்டுவரப்பட்டதும், பூமியில் விழுந்ததும், ஆமணுக்கு எருக்கு இலைகளில் கொண்டுவரப்பட்டதுமான பத்திரமும், புஷ்பமும் பழவகையும் விலக்கத் தகுந்தன. கவனிக்காது கொண்டுவரின் பூஜைக்கு உபயோகப்படா என்பதாம்.

வைதிகாக்கினியைத் தியானிக்கும் முறை கூறுகின்றார்.

இரத்த நிறமான உடம்பும், ஒரு கழுத்தும், இரண்டு முகமும், ஆறு கண்ணும், நான்கு செவியும், நான்கு கொம்பும், மூன்றுகாலும், ஏழு நாவும், ஏழு கையும், அவற்றின் வலது பக்கத்தில் சுருக்கு சுருவமும், வேலும், ஜபமாலையும், இடது பக்கத்தில் குந்தாயுதமும், விசிறியும், நெய் பாத்திரமும் உடையதாகவும், ஆட்டின் மேலிருப்பதாகவும் தியானிக்க வேண்டுமென்று சிவாகமத்திற் சொல்லப் பட்டிருக்கிறது.

சிவந்த திருமேனியும், பத்மாசனமும், சிவகுமாரனாகையால் ஐந்து திருமுகங்களும், பத்துத் திருக்கரங்களும் உடையதாகவும், நடு முகத்தில் கநகை முதலிய மூன்று நாக்கும், மேற்கு முதலாகிய நான்கு முகங்களில், இரண்யன் முதலிய நான்கு நாக்கும் இருப்பதாகவும், இரண்டு பாதங்களும், பாலவயதும் உடையதாகவும், முகங்கள் தோறும், மூன்று கண்களிருப்பதாகவும், அல்லது ஒரு திருமுகமும், நான்கு திருக்கரங்களும் உடையதாகவும், அந்தத் திருக்கரங்களில் சத்தியும், ஜபமாலையும் அபயமும், வரப்பிரசாதமும், உடையதாகவும், சிவாக்கினியை தியானிக்க வேண்டும். பாலவயதாகத் தியானிப்பதற்குப் பிரமாணம் காமிகம்.

பிரதிஷ்டா காலத்தில் விருத்தரூபமாகவும், உத்ஸவகாலத்தில் யௌவனரூபமாகவும், தீஷாகாலத்தில் பாலரூபமாகவும் அக்கினியைப் பாவிக்க வேண்டுமென்பதாம்.

ஏழு நாக்கு உண்டென்பதற்கு பிராமணம் கூறுகின்றார்.

---

**உளவரைத் தூக்காத ஒப்புர வாண்மை**
**வளவரை வல்லைக் கெடும்** **480**

*தனக்குள்ள பொருள் அளவைச் சீர்தூக்கிப் பாராமல் மேற்கொள்ளும் ஒப்பரவினால், ஒருவனது செல்வத்தின் அளவு விரைவில் கெடும்.*

ரக்தை, கநகை, பகுரூபை, சுப்பிரபை, கிருஷ்ணை, அதிரக்தை, ஹிரண்யை, என ஏழு நாக்குக்கள் அக்கினிக்கு உண்டு. அவற்றுள், கிழக்கு முகத்தில் சுப்பிரபையும், தெற்கு முகத்தில் கிருஷ்ணையும், வடக்கு முகத்தில் ரக்தையும், மேற்கு முகத்தில் ஹிரண்யையும், என்றறிந் துகொள்க. நடுமுகத்தில் மூன்று நாக்குச் சேர்த்து ஐந்து முகங்களிலும் ஏழு நாக்குக்கள் உண்டென்பது கண்டுகொள்க. இவ்வாறறிந்து அக்கிநிகாரியஞ் செய்ய வேண்டும்.

ஓமஞ்செய்வதற்குரிய முத்திரையைக் கூறுகின்றார்.

தனது வலது கையின் அணிவிரல் கட்டைவிரல்களால் சுருவத்தைப் பிடித்துக்கொள்ளல் வேண்டும். சுண்டுவிரல் குறுகினதாகவும் சுட்டுவிரல் நடுவிரல்கள் உயர்ந்து மிருக்க வேண்டும். இது ஓம முத்திரையாகும்.

ஓமத் திரவியங்கைளக் கொண்டு ஓமஞ்செய்யும் முறையை மூன்று சுலோகங்களாற் கூறுகின்றார்.

சகல ஓமத்திரவியங்களையும், ஓமத்தில் உபயோகிக்கு முறை வருமாறு. சம்பா நெல்லு, அரிசி, பயர், உழுந்து, கடலை, துவரை, அவரை, கடுகு, கொள்ளு முதலியவற்றை ஐந்து விரல்களினால் ஆகுதி செய்ய வேண்டும். எள்ளை மிருகீ முத்திரையினாலும், தயிரை குவித்த கையினாலும், ஆகுதி செய்ய வேண்டும். பொறியை ஒரு பிடியால் ஓமஞ்செய்ய வேண்டும். பாயசம், பால், தேன் முதலிய திரவகத்திரவியங்களனைத்தையுஞ் சுருவமென்னும் பாத்திரமெவ்வளவு கொள்ளுமோ, அவ்வளவு பிரமாணம சுருவத்தாலும், இன்னும் ஏனைய தின்னும் பொருள்களை அவை எவ்விதம் இருக்குமோ அவ்விதமே ஒரு பலப்பிரமாணம் பர்வாக்களாலும், அன்னத்தை ஒரு கவள அளவாகவும், பழவகை அனைத்தையும் நாலங்குல அளவாகவும், கிழங்குவகை அனைத்தையும் முஷ்டிப்பிரமாணமாகவும், பணியாரவகையனைத்தையுஞ் சிறிதாகத்துண்டு செய்தும் சந்தணத்தைக் கடலை அளவாகவும், வெல்லம் குங்குலியம் முதலானவற்றை இலந்தைப்பழ விரை அளவாகவும் ஓமஞ்செய்ய வேண்டும். நெய்யை ஒரு கழஞ்சி அளவாகவும், சமித்து, கரும்பு, விறகு, கொடி என்னுமிவற்றை ஒருசாண் அளவாக பதாக முத்திரையினாலும் ஓமஞ்செய்ய வேண்டும். அன்ன முதலியவற்றை சங்க முத்திரையினால் ஓமஞ் செய்ய வேண்டும்.

ஓமஞ்செய்வதாலுண்டாம் பலனை இரண்டு சுலோகங்களாற் கூறுகின்றார்.

பாலினால் ஓமஞ்செய்தால் பசுக்களுண்டாகும். பசுவின் நெய்யால் ஓமஞ்செய்தால், மகத்தான ஐசுவரியமுண்டாகும். சருக்கரையால் ஓமஞ்செய்தால் கீர்த்தியுண்டாகும். தயிரினால் ஓமஞ்செய்யின் எல்லா விருத்தியுமுண்டாகும். அன்னத்தினால் ஓமஞ்செய்யின் வசியமும், திவ்யான்ன முதலிய சுகபோஜனமுமுண்டாகும். பொறியினால் ஓமஞ்செய்யின் அதுவுங் கீர்த்தியைத் தரும். எள்ளும், அரிசியுங்கலந்து ஓமஞ்செய்யின் அதிக தனமுண்டாகும். தேனினால் ஓமஞ்செய்யின் நினைத்த காரியம் சித்தியாகும். குங்குமப் பூவினால் ஓமஞ்செய்யின் திவ்ய வஸ்திரமுண்டாகும். வெள்ளை வெற்றிலையாலும் பாக்காலும் ஓமஞ்செய்தால் நல்ல ரூபமும் கவிதையுமுண்டாகும். தாமரை புஷ்பத்தால் ஓமஞ்செய்யின் ராஜ வசியமுண்டாகும். நீலோத்பல புஷ்பத்தால் ஓமஞ்செய்யின் ராஜஸ்தரி வசியமாவாள். ஆம்பலினால் ஓமம் செய்தால் மந்திரி வசியமாவன். அரசின் சமித்து முதலியவற்றால் ஓமஞ்செய்யின் பிராமணர் முதலிய வசியமாவர். வறள்வஞ்சியினால் ஓமஞ்செய்யின் மழை விட்டுப்போகும். நீர்வஞ்சியினால் ஓமஞ்செய்யின் மழையுண்டாகும். புத்தளி முதலியவற்றால் ஓமஞ்செய்யின் எல்லாம் வசியமாகும். இவ்வாறு அறிந்துகொள்க.

**The measure of his wealth will quickly perish whose liberality weighs not the measure of his property** **480**

# பாரொடு விண்ணாய்ப் பரந்தவன்

சித்தாந்தரத்தினம் க. கணேசலிங்கம்

எந்தப் பொருளின் அமைப்பிற்கும் மூலக்கூறுகளாக ஐம்பூதங்கள் உள்ளன. மண், நீர், தீ, வளி, வெளி ஆகியவையே ஐம்பூதங்கள். வடமொழியில் இவை முறையே பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாயம் எனப்படும்.

ஆகாயம் என்பது ஒரு பூதமல்ல எனக் கொண்டு, பூதங்கள் நான்கு எனக்கொள்பவரும் உள்ர். உலகாயுதர் இக்கருத்தைக் கொண்டுள்ளனர். உலகாயுதம் தவிர்ந்த இந்திய தத்துவங்கள் பலவும் பூதங்கள் ஐந்தெனக் கொள்கின்றன.

## இறை வியாபகம்

எல்லாப் பொருள்களிலும் இறைவன் வியாபகமாக இருக்கிறான் என்று அருளாளர்கள் கூறுகிறார்கள். அப்பொருளின் வளர்ச்சிக்கும் மாற்றத்திற்கும் இறையருளே துணைநிற்கின்றது. **" மருவி எப்பொருளும் வளர்ப்போன் காண்க"** என்ற திருவாசகத்துத் திருவண்டப் பகுதியில் வரும் தொடர் இதனை உணர்த்துகிறது.

ஒரு பொருளைப் பகுத்துக் கொண்டு போனால், இறுதியில் அது நுண்ணிய அணுக்களாக வருகிறது. இவற்றில் இறைவன் **"துன்னணுப் புரைய"** இருக்கின்றான். அணுக்களை வகுத்துக் கொண்டு போனாலும் இறுதியாக வரும் அதிநுண்ணிய பொருளிலும் அவனே உள்ளான். இதனை மாணிக்கவாசகர் உணர்த்தும் பாங்கு அறிவியல் சார்ந்தது.

**"சென்றுசென் றணுவாய்த் தேய்துதேய்ந் தொன்றாம்**

**திருப்பெருந் துறையுறை சிவனே."**

சிவனின் பெருமையை அணுவின் தன்மையுடன் ஒப்பிட்டுக் கூறுவதும், அவன் அரியதில் அரியவன் என்று காட்டுவதும் மாணிக்கவாசகரின் இயல்பாக உள்ளது.

**"அணுத்தரும் தன்மையில் ஐயோன் காண்க.**

**இணைப்பரும் பெருமையில் ஈசன் காண்க**

**அரியதில் அரிய அரியேன் காண்க."**

என்ற அடிகள் இதனை விளக்குகின்றன.

அணுத்தன்மையை இறைவனின் இயல்புக்கு உவமையாகக் காட்டும் மணிவாசகர், பொருள்களின் மூலக்கூறுகளான ஐம்பூதங்களில் இறைவன் நிற்கிறான் என்றும் உணர்த்துகிறார். **"பூதங்கள் தோறும் நின்றாய்"** என ஞானிகள் பாடிப்பரவுவதாகத் திருவாசகம் கூறுகிறது.

பூதங்கள் தோறும் நிற்கும் சிவபரம் பொருள் எங்கும் நிறைந்திருக்கிறது. சிவனின் இந்த வியாபகத் தன்மையை இறையருள் பெற்ற ஞானிகளாலேதான் அறிய முடியும். மற்றையவர்கள் அருளாளரின் வார்த்தைகளிலிருந்தும், நூல்களிலிருந்தும் இதனை உணர முடியும். மாணிக்கவாசக சுவாமி இறையருள் பெற்ற ஞானி. அவரால் இறைவனின் வியாபகத் தன்மையை அறிய முடிந்தது. இத்தன்மை கொண்ட சிவனைத் தவிர வேறெதிலும் தனக்குப் பற்றில்லை எனக் கூறுகிறார்.

**"பாரொடு விண்ணாய்ப் பரந்தஎம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்"**

என்பது அவரின் திருவாக்கு.

**தமிழகத்துச் சிந்தனை:-**

பாரொடு விண்ணாய்ப் பரந்திருக்கும் பொருள்கள் பிருதுவி தொடக்கம் ஆகாயம் வரையுள்ள ஐம்பூதங்கள். அவற்றின் இயல்புகள் திருமுறைகளில் கூறப்பட்டுள்ளன. பின் வந்த சைவசித்தாந்த நூல்களில் இவை விரித்துக் கூறப்பட்டுள்ளன. ஐம்பூதங்கள் குறித்த கருத்தை பழந்தமிழ் நூல்களிலும் காணமுடிகிறது. சைவசித்தாந்தத்தின் வேர்களையும் அங்கே காணமுடியும்.

எழுத்துக்கும், பொருளுக்கும், சொல்லுக்கும், இலக்கணம் கூறும் தொல்காப்பிய நூலின் விளக்கங்கள் சில சைவசித்தாந்த கருத்துக் களைப் பிரதிபலிக்கின்றன. தொல்காப்பிய ஆராய்ச்சி யாளர்கள் பலர் இதனைச் சுட்டிகாட்டியுள்ளனர். மேலைநாட்டு ஆராய்வாள ரான கால்ட் வெல்ட் என்பவர் இதுபற்றிப் பின்வருமாறு கூறுகிறார்.

**"தமிழில் பெயர்ச் சொற்களை வகுத்த முறை ஐயத்துக்கு இடமின்றித் தத்துவ நோக்கில் அமைந்துள்ளது."**

நாம் வாழும் உலகம் ஐம்பூதங்களின் கலப்பானது. அதன் அமைப்பும் பல்வேறுபட்ட தன்மைகளும் எளிதில் விளங்க முடியாதவை, மயக்கம் தருபவை. இதனை விளக்குவதாக தொல்காப்பியத் தொடர் உள்ளது.

**"நிலம்நீர் தீவளி விசும்பொடு ஐந்தும்
கலந்த மயக்கம் உலகம்....."**

சங்கத்தமிழ் நூலான புறநானூறு இதனை வேறு வகையில் விளக்குகிறது. பந்து போன்ற இந்த உலகம் விண்வெளியில் தொங்கிக் கொண்டிருக்கிறது. அதனை ஏந்தி நிற்பதாக விசும்பு உள்ளது. உலகத்தைக் குறிக்கும் ஞாலம் என்ற தமிழ்ப் பெயரே இதனை உணர்த்துகிறது. ஞாலுதல் என்றால் தொங்குதல் என்பது பொருள்.மண்ணின் செறிவு கொண்டது நாம் வாழும் நிலம். அதனை ஏந்துவது விசும்பு. விசும்பைத் தடவிச் செல்வது காற்று. காற்றின் வழியிற் செல்வது தீ. அதற்கு முரணானது நீர். பின்வரும் புறநானூற்றுப் பாடல் இந்தப் பொருளில் அமைந்துள்ளது.

**"மண்திணிந்த நிலனும் நிலனேந்திய விசும்பும்
விசும்புளதவரு வளியும் வளிதலைஇய தீயும்
தீ முரணிய நீரும்....."**

பண்டைத் தமிழகத்துச் சிந்தனைப் பரப்பில் காணும் சில கருத்துக்கள் இவை. இத்தகைய கருத்துக்கள் பின் வந்த திருமுறைகளிலும் சைவசித்தாந்த நூல்களிலும் இடம் பெறுகின்றன. சித்தாந்த நூல்களான மெய்கண்ட சாத்திர நூல்கள் அனைத்தும் தமிழில் உள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

**பூதங்களின் தன்மை:-**

இந்திய தத்துவங்கள் கூறும் ஐம்பூதங்கள் குறித்த விரிவான விளக்கத்தைச் சைவ சித்தாந்தம் தருகிறது. மண் முதல் வெளி ஈறான ஐந்தையும் பூதங்கள் என்று பொதுவாகக் கூறினாலும்,தத்துவ உலகில் இவை பற்றிக் காணும் விளக்கம் ஆழ்ந்த சிந்தனைக்குரியது.

நாம் காணும் பருப்பொருள்கள் எல்லாம் காணப்படாத நுண்பொருட்களை மூலமாகக் கொண்டுள்ளன. ஐம்பூதங்களும் இத்தகைய நுண்பொருட்களே. அவற்றிலிருந்தே மண் முதலானவை தோன்றுகின்றன.

ஆகாயம், வாயு, தேயு, அப்பு, பிருதிவி என்பன ஐம்பூதங்களைக் குறிக்கும் வடமொழிச் சொற்கள். இவையும் இவற்றிலும் நுண்மையான பொருள்களை மூலக் கூறுகளாகக் கொண்டுள்ளன. இம்மூலக்கூறுகள் முறையே சத்தம், பரிசம், ரூபம், ரசம், கந்தம் எனப்படும். தமிழில் ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் எனப்படும். தன்மாத்திரைகள் என்று கூறப்படுபவை இவை. தன்னளவில் நிற்கும் பொருள் என்பது தன்மாத்திரை என்பதன் கருத்து. இந்தத் தன்மாத்திரைகளின் தன்மையை அறிந்தவர்களால் அவற்றாலான ஐம்பூதங்களின் தன்மையையும் பூதங்களான உலகின் தன்மையையும் அறியமுடியும். உலகம் அவர்களின் வசப்படும். திருவள்ளுவர் இதனைப் பின்வருமாறு விளக்குகிறார்.

**"சுவைஒளி ஊறுஓசை நாற்றம்என் றைந்தின்**
**வகை தெரிவான் கட்டே உலகு"**

ஐம்பூதங்களினும் நுண்மையானதாகத் தன் மாத்திரைகள் இருப்பதால் தன்மாத்திரைகள் சூமக்கு பூதங்கள் என அழைக்கப்படுகின்றன.ஐம்பூதங்களும் துாலபூதங்கள் என்று கூறப்படுகின்றன. துாலப்பூதங்களை மகாபூதங்கள் என்றும் சிலர் அழைப்பதுண்டு.

## பூதங்களின் தோற்றம்:-

தன்மாத்திரை ஒவ்வொன்றையும் மூலப் பொருளாகக் கொண்டு ஒவ்வொரு பூதம் தோன்றும். சத்தத்தில் இருந்து ஆகாயமும், பரிசத்திலிருந்து வாயுவும் ரூபத்திலிருந்து தேயுவும், ரசத்திலிருந்து அப்புவும் கந்தத்திலிருந்து பிருதிவியும் தோன்றுகின்றன. ஆயினும் பூதங்கள் ஒன்றுடன் ஒன்று கொழுவுப்பட்டு நிற்பதால் ஒன்றின் குணம் மற்றையவற்றின் குணங்களாகவும் சேர்ந்து நிற்பதை அறியலாம். இதில் ஆகாயம் மற்ற நான்கிலும் பரவி நிற்கிறது. அதன் குணத்தை மற்றைய நான்கிற்கும் கொடுக்கிறது. ஆனால் அவற்றின் குணத்தை அது ஏற்பதில்லை. அதனால் ஆகாயத்தின் குணம் ஒன்று என்றே கருதப்படுகிறது. வாயுதன் குணத்தோடு ஆகாயத்தின் குணத்தையும் கொண்டு இரண்டு குணமுடையதாய் இருக்கிறது. தேயு அதன் குணத்தோடு வாயு, ஆகாயம் ஆகிய இரண்டின் குணங்களையும் கொண்டு மூன்று குணங்கள் உடையதாக இருக்கிறது. இது போல் அப்பு தன் குணத்தோடு முற்கூறிய மூன்றின் குணங்களையும் கொண்டு நான்கு குணம் உடையதாக இருக்கிறது. பிருதிவி தன் குணத்தோடு மற்றைய நான்கையும் கொண்டு ஐந்து குணங்கள் உடையதாக இருக்கிறது. இந்த சித்தாந்த உண்மையை விளக்குவதாக பின்வரும் திருவாசகப் பாடல் உள்ளது.

**"பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி**
**நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி**
**தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி**
**வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி**
**வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி"**

அப்பரடிகளும் தனது தேவாரப் பதிகங்களில் இதனை விளக்குவதைக் காணலாம்.

**"மண்ணதினில் ஐந்தைமா நிலத்தில் நான்கை**
**விளங்கெரியில் மூன்றைமா ருதத்தி ரண்டை**
**விண்ணதனில் ஒன்றை..........."**

**"மின்னுருவை விண்ணகத்தில் ஒன்றாய் மிக்கு**
**வீசுங்கால் தன்னகத்தில் இரண்டாய்ச் செந்தீத**
**தன்னுருவின் மூன்றாய்த் தாழ்புனலின் நான்காய்த்**
**தரணாதலத் தஞ்சாகி......"**

குணம் உள்ள பொருள் குணி எனப்படும். குணமும், குணியும் ஒன்றை ஒன்று விட்டகலா தவை. குணமில்லையானால் குணியில்லை. தன்மாத்திரைகளில் ஐந்தையும் குணமாகக் கொண்டது. பிருவி (நிலம்) என்னும் பூதம். ஆயினும் அதற்கே உரிய விசேட குணமாக இருப்பது கந்தம் (நாற்றம்) எனும் தன்மாத்திரை. நாற்றம் மடிந்தால் அதன் குணியான நிலம் மடிந்து விடும். எஞ்சியிருக்கும் நான்கு தன் மாத்திரைகளைக் கொண்ட நீர் இருக்கும். ஆகவே பூதங்களின் தன்மைக்கேற்ப மண் ஒடுங்கி நீர் விளங்குகிறது. இங்ஙனமே ஒன்று ஒடுங்க இன்னொன்று வெளிப்படடு விளங்குகிறது. இறுதியில் வெளி வெளிப்பட்டுத் தோன்றும். பேரூழிக்காலத்தில் இத்தகைய படி முறை ஒடுக்கம் நிகழ்ந்து இறுதியில் வெளியும் ஒடுங்கி படைப்போன், காப்போன் ஆகியவர்களும் ஒடுங்கி, ஆதியந்தம் இல்லாத பரமன் ஒருவனே இருப்பான். இதனைப் பின்வரும் சம்பந்தர் தேவாரம் விளக்குகிறது.

**"இருநில னதுபுன லிடைமடி தரவெரி புகவெரி யதுமிகு பெருவளி யினிலவி தரவெளி கெடவிய னிடைமுழுவது**

கட

**இருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவனினமலர் மருவிய வறுபத மிசைமுரன் மறைவன மமர்தரு பரனே"**

சம்பந்தப் பெருமானின் இப்பதிகத்திலே ஒடுக்க முறையிலே ஐம்பூதங்கள் விளக்கப் படுகின்றன.

**எல்லாம் சிவன் செயல்:-** பூதங்கள் உட்பட்ட எல்லாப் பொருட்களின் ஒடுக்கத்திற்கும், தோற்றத்திற்கும் காரணமாக இருப்பது சிவபரம் பொருளே. எப்பொருளும் அவனாலே வளர்ச்சியடைகிறது. அனைத்தும் அவனருளாலே தோன்றி நின்று மறைகின்றன.

ஒவ்வொரு பொருளுக்கும் ஒவ்வொரு தன்மையுண்டு. அத்தன்மையை அதற்குத் தொடர்புடைய பொருளில் அமைத்தவன் இறைவன். ஞாயிற்றின் ஒளிக்கும் திங்களின் தன்மைக்கும் அவனே காரணமாக உள்ளான். எதனையும் சுடும் வெம்மை கொண்டு தீ இருக்கிறது. பலபொருட்கள் கலந்துறைவதற்கு இடமாக வான் (வெளி) இருக்கிறது. காற்றின் அசைவு ஊக்கம் உடையது. நீருக்கு அதற்கேயுரிய சுவையுண்டு. மண்செறிவு கொண்டு திண்மையாக இருக்கிறது. ஐம்பூதங்களில் வேறுபட்ட இந்தக் குணங்களை இறைவனே சேர வைத்தான். திருவாசகத்தின் திருவண்டப் பகுதியில் இவ்வுண்மை தெளிவாகப் பேசப்படு கிறது.

**"அருக்கனிற் சோதி அமைத்தோன் திருத்தகு**
**மதியில் தன்மை வைத்தோன் திண்டிறல்**
**தீயின் வெம்மை செய்தோன் மேதகு**
**காலின் ஊக்கங் கண்டோன் நிழல்திகழ்**
**நீரில் இன்சுவை நிகழ்ந்தோன் வெளிப்பட**
**மண்ணில் திண்மை வைத்தோன்.........."**

விண்முதலாகிய பூதங்களின் வேறுபட்ட தன்மைகள் இறை அருளால் வந்தவை. அப்பூதங்களிலும் இறைவனே நிற்கின்றான். அவற்றை வகைப்படுத்தி வெளிப்படுத்துபவனும் இறைவனே. **"விண் முதற்பூதம் வெளிப்பட வகுத்தோன்"** என்று சிவனின் அருட்செயலை மணிவாசகர் போற்றுகிறார். பாரொடு விண்ணாய்ப் பரந்த அவனின் இந்த அருட் செயல் உலகை நிலை நிறுத்தி உயிர்களை வளர்க்கிறது.

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| மாசி | 01 | 13.02.2004 | வெள்ளி | மாதப்பிறப்பு |
| | 05 | 17.02.2004 | செவ்வாய் | காரியார் குருபூசை |
| | 06 | 18.02.2004 | புதன் | பிரதோஷ விரதம் |
| | | | | மகாசிவராத்திரி விரதம் |
| | 08 | 20.02.2004 | வெள்ளி | அமாவாசை விரதம் |
| | 09 | 21.02.2004 | சனி | கோச்செங்கட் சோழர் குருபூசை |
| | 12 | 24.02.2004 | செவ்வாய் | சதுர்த்தி விரதம் |
| | 14 | 26.02.2004 | வியாழன் | ஷஷ்டி விரதம் |
| | 15 | 27.02.2004 | வெள்ளி | கார்த்திகை விரதம் |
| | 17 | 29.02.2004 | ஞாயிறு | கச்சியப்ப சிவாச்சாரியார் குருபூசை |
| | 21 | 04.03.2004 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 22 | 05.03.2004 | வெள்ளி | நடேசரபிஷேகம் |
| | 23 | 06.03.2004 | சனி | மகாமகம், பூரணை விரதம் |
| | 24 | 07.03.2004 | ஞாயிறு | திருவள்ளுவர் குருபூசை |
| | 25 | 08.03.2004 | திங்கள் | எறிபத்தர் குருபூசை |
| | 27 | 10.03.2004 | புதன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| பங்குனி | 01 | 14.03.2004 | ஞாயிறு | மாதப்பிறப்பு |
| | 05 | 18.03.2004 | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 06 | 19.03.2004 | வெள்ளி | தண்டியடிகள் குருபூசை |
| | 07 | 20.03.2004 | சனி | அமாவாசை விரதம் |
| | 11 | 24.03.2004 | புதன் | சதுர்த்தி விரதம் |
| | 12 | 25.03.2004 | வியாழன் | கார்த்திகை விரதம் |
| | 13 | 26.03.2004 | வெள்ளி | ஷஷ்டி விரதம், நேசர் குருபூசை |
| | 15 | 28.03.2004 | ஞாயிறு | கணநாதர் குருபூசை |
| | 18 | 31.03.2004 | புதன் | முளையடுவார் குருபூசை |
| | 19 | 01.04.2004 | வியாழன் | யோகர்சுவாமி குருபூசை |
| | 21 | 03.04.2004 | சனி | சனிப்பிரதோஷ விரதம் |
| | 22 | 04.04.2004 | ஞாயிறு | பங்குனி உத்தரம் |
| | 23 | 05.04.2004 | திங்கள் | பூரணை விரதம் |
| | 25 | 07.04.2004 | புதன் | காரைக்கால் அம்மையார் குருபூசை |
| | 26 | 08.04.2004 | வியாழன் | சங்கடஹர சதுர்த்தி விரதம் |

# புத்தக விற்பனை

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

## திருவாசகம்

### வெளிவந்துள்ளது.

நீண்டகாலப் பாவனைக்கு ஏற்றவண்ணம் பிளாஸ்டிக் கவருடன் கூடிய திருவாசகம் விற்பனைக்கு உண்டு. பிரதி ஒன்றின் விலை ரூபா 150/- மட்டுமே. மொத்தக் கொள்வனவிற்குக் கழிவு உண்டு.

* விதியை வெல்வது எப்படி?
* திருவருட்பயன் - மூலமும் உரையும்

ஆகிய நூல்களும் விற்பனைக்கு உண்டு.

*கிடைக்கும் இடம்:*

**சைவநீதி**

195, ஆட்டுப்பட்டித் தெரு, கொழும்பு-13.

---


எங்களிடம் ஐம்பொன், வெள்ளி, பஞ்சலோகம் வார்ப்பு விக்கிரகங்கள், வீட்டுப்பூசைப் பொருட்கள், கலைநயம் மிக்க சிலா விக்கிரகங்கள், கோபுரக்கலசங்கள், பட்டுக்குடைகள், கும்பக்குடைகள், சந்திரவட்ட, பூச்சக்கரக் குடைகள், ஆலவட்டம், சுருட்டி மகர தோரணம், திரைச்சீலைகள், வெள்ளி, முத்து, கிரீடங்கள், வாக மாலை மற்றும் மின்சார மங்கள வாத்தியங்கள், இந்திய கலைத்திறம் படைத்த குத்துவிளக்குகள், வீட்டு அலங்காரப் பொருட்கள் குறைந்த விலையில் கிடைக்கும்.

# கலையரசி

**23/1, விவேகானந்த மேடு, கொழும்பு-13.**

**தொ.பே: 2478885**


சைவநீதி இதழில் வெளிவரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்குக் கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர். *-இதழ் நிர்வாகிகள்*



# GeDora

***Dream has Come True***

**EXPRESS SERVICE**

Housing Loans

***Within***

**24 BUSINESS**

***Hours***

**Hot Line / Fax: 01 2573510**

**NSB**

*Your Family Savings Bank*